நேரு கூறிய

ஆரியர் திராவிடர்

போர்

நேற்றும் - இன்றும்!

வேலூர்,
நாகப்பட்டினத்தில்
கலைஞரின்
சூளுரை!



திராவிடர் கழகம்
தி.மு.க. அறக்கட்டளை
பொதுநிலையம்
ஆய்வுக் கோவை
நூலகம்

நேரு கூறிய
ஆரியர் - திராவிடர் போர்
நேற்றும் - இன்றும்!

வேலூர், நாகப்பட்டினத்தில்
கலைஞரின் சூளுரை!

திராவிடர் கழக வெளியீடு

பெரியார் திடல், 84/1, (50) ஈ.வெ.கி. சம்பத் சாலை,
வேப்பேரி, சென்னை - 600 007

நூல் குறிப்பு

நூல் பெயர்	:	**நேரு கூறிய ஆரியர் - திராவிடர் போர் நேற்றும் - இன்றும்!**
ஆசிரியர்	:	**கலைஞர்**
பொருள்	:	அரசியல்
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	முதல் பதிப்பு : 2010 இரண்டாம் பதிப்பு : 2014
தாள்	:	60 gsm மேப் லித்தோ
நூல் அளவு	:	டெம்மி (140 mm x 220 mm)
அச்சு எழுத்து அளவு	:	11 points
பக்கங்கள்	:	32
கட்டமைப்பு	:	இயல்பு (சாதாரணம்)
நூல் எண்ணிக்கை	:	3000
நன்கொடை (குறைந்த அளவு)	:	ரூ.15/-
வெளியீடு மற்றும் உரிமை	:	**தீராவிடர் கழகம்** சென்னை - 600 007. ☎: 044 - 2661 8161
அச்சுக் கோப்பு	:	**பெரியார் கணினி ஆய்வுக் கல்வியகம்,** சென்னை - 600 007.
அச்சிட்டோர்	:	**விடுதலை ஆஃப்செட் பிரின்டர்ஸ்,** சென்னை - 600 007.
விற்பனை உரிமை	:	**பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம்,** பெரியார் திடல், 84/1 (50), ஈ.வெ.கி. சம்பத் சாலை, வேப்பேரி, சென்னை -600 007. ☎: 26618163 பெரியார் மாளிகை, புத்தூர், திருச்சி - 620 017 ☎: 2771815 info@periyar.org www.periyar.org

ISBN 978-93-80972-19-0

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18

ஆரியர் – திராவிடர் போராட்டம் மூண்டுவிட்டது ஆரியத்தை வீழ்த்துவோம் – வாரீர்!

வேலூர் கோட்டைவெளி மைதானத்தில் 27.11.2010 சனி மாலை மக்கள் வெள்ளமெனத் திரண்ட பொதுக் கூட்டத்தில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய எழுச்சி உரை!

வேலூர் கோட்டைவெளி மைதானத்தில் மாலை தமிழக அரசின் சாதனை விளக்க பிரம்மாண்டப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் வெள்ளமெனத் திரண்ட மக்களிடையே எழுச்சிப் பேருரையாற்றிய முதல் அமைச்சர் கலைஞர் அவர்கள், "திராவிட சமுதாயத்தை எழுச்சி பெறச் செய்வோம் – ஆரியத்தின் சூழ்ச்சியை வென்றிட சூளுரைப்போம்!" என்று குறிப்பிட்டார். "தி.மு.க. – காங்கிரஸ் உறவைத் துண்டிக்க நினைப்பவர்களுக்கு இடம் கொடுத்தால், துண்டிப்பவர்களுக்கும், துண்டிக்கப்படுகின்றவர்களுக்கும் நஷ்டம்!" என்றும் "திராவிட இன உணர்வை உருவாக்கிய இயக்கத்தை அழிக்க நினைப்பவர்களுடன் கம்யூனிஸ்ட்டுகள் இணைந்திருப்பது ஏன்?" என்றும் தமது உரையில் முதல்வர் கலைஞர் அவர்கள் வினா தொடுத்தார்.

வேலூரில் நடைபெற்ற பிரம்மாண்டமான பொதுக்கூட்டத்தில் முதல் அமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:–

இன்றைய நிகழ்ச்சிகள் – காலை 8 மணிக்கு சென்னையிலே புறப்பட்டு துரைமுருகனும் அவரோடு சேர்ந்து இந்த விழாக்களை நடத்தியவர்களும் காட்டிய கருணையினால் ஏறத்தாழ மாலை 3 மணிக்கு மதிய உணவருந்தி, அதற்குப் பிறகு வேறு பல நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு, வெள்ளம் போல் மக்கள் குழுமியிருக்கின்ற வேலூர் பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்கின்ற வாய்ப்பை நான் பெற்றிருக்கின்றேன்.

என்னைப் பற்றியும், வேலூர் மக்கள் காட்டுகின்ற ஆர்வத்தைப் பற்றியும் இங்கே உரையாற்றிய மத்திய இணையமைச்சர் தம்பி ஜெகத்ரட்சகன் அவர்கள், என்னை மக்கள் ஆண்டவனாகக் கருதுகிறார்கள் என்று சொன்னார். அப்படிக் கருதக்கூடாது என்பதற்காக பெரியார் எத்தனை ஆண்டு காலம் போராடி இருக்கிறார் என்பதையும், அண்ணா எத்தனை ஆண்டு காலம் போராடியிருக்கிறார் என்பதையும், நான் எத்தனை ஆண்டுகாலம் எடுத்துச் சொல்லி வந்திருக்கிறேன் என்பதையும் நம்முடைய ஜெகத்ரட்சகன் ஏன் மறந்து விட்டார் என்று எனக்குத் தெரியவில்லை. மனிதனை மகானாகக் கருதுவதும், அல்லது ஆண்டவனாகக் கருதி ஏமாறுவதும் இந்த நாட்டிலே வழக்கமாக இருக்கிற காரணத்தினால், அப்படி கருதக்கூடாது என்கின்ற அறிவுரையை அய்யா பெரியார் அவர்கள் பல்லாண்டு காலமாக வழங்கி வந்தார்கள்.

“மனிதனை ஆண்டவனாகக் கருதி ஏமாறக் கூடாது”
என்றுதான் அறிவுறுத்துகிறோம்

அவருடைய குருகுலத்தில் பயின்றவன் நான். நம்முடைய ஜெகத்ரட்சகன் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். அவருடைய பெயர் ஜெகத்ரட்சகன் என்று இருக்கின்ற காரணத்தினால், என்னையும் “ஜெகத்ரட்சகனாக” கருதிக் கொண்டு, “ஆண்டவன்” என்று மக்கள் என்னைச் சொல்வதாகச் சொன்னார். பின்னால் இருந்து தாய்மார்கள், “ஆண்டவன் போகிறான், ஆண்டவன் போகிறான்” என்று சொன்னதை, தான் கேட்டதாக ஜெகத்ரட்சகன் சொன்னார். அப்போது ஜெகத்ரட்சகன் என்ன சொல்லியிருக்க வேண்டும். “ஆண்டவன் அல்ல அம்மா! ஆள்பவர் போகிறார்” என்று சொல்ல வேண்டுமே தவிர, ஆண்டவன் என்றால் Past Tense (கடந்த காலம்).

'ஆள்பவன்' என்றால் Present Tense (நிகழ்காலம்). ஆள்பவன் என்று சொல்ல வேண்டுமே தவிர, ஆண்டவன் போகிறார் என ஜெகத்ரட்சகன் ஒத்துக் கொண்டாலும், நான் ஒத்துக் கொள்ளத் தயாராக இல்லை.

ஆண்டவனாக இருப்பதில் லாபம்தான். ஏனென்றால், எந்தக் குறையை மக்கள் சொன்னாலும், கேட்டுக் கொண்டு உட்கார்ந் திருக்கலாம், படுத்திருக்கலாம், தூங்கிக் கொண்டிருக்கலாம், திருவரங்கத்திலே போய் ஆண்டவனிடத்திலே ஆயிரக்கணக்கான பக்தர்கள் முறையிடுகிறார்களே, "அங்கே ரங்கநாதர் எழுந்து என்ன செய்தார்?" என்று யாராவது கேட்டிருக்கிறார்களா? ஆண்டவனுக் குள்ள சவுகரியம் ஆள்பவனுக்குக் கிடையாது. அதனால்தான் ஆண்டவனாக இருக்க விரும்பவில்லை. ஆள்பவனாகவே இருந்து மக்களுக்கு அன்றாடம் பணியாற்றுவதற்கு, அவர்களுக்குச் சேவை செய்வதற்கு நான் விரும்புகின்றேன். ஆண்டவன் என்றெல்லாம் சொல்லி, மக்களை ஏமாற்றுகின்ற ஒரு கூட்டம் இருக்கின்றது. அந்தக் கூட்டத்தை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்து, வீழ்த்தி, அதில் யாரும் ஏமாறாமல் இருக்கின்ற பகுத்தறிவுப் பிரச்சாரத்தை செய்வதுதான் நமது கடமை. அந்தப் பகுத்தறிவுப் பிரச்சாரத்தை நாம் தொடர்ந்து செய்ய வேண்டுமென்று இந்த மாபெரும் பொதுக்கூட்டத்தில் உறுதி யெடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இளைஞர்கள் தி.மு.கழக வழியில் நடந்து
சமுதாயப் புரட்சிகளை உருவாக்கிட வேண்டும்!

ஆயிரக்கணக்கான இளைஞர்கள் இங்கே குழுமியிருக்கின்றீர்கள். உங்களையெல்லாம் ஆண்டவன் பெயரால், பக்தியின் பெயரால், மதத்தின் பெயரால் நான் ஏமாற்ற விரும்பவில்லை. ஏமாற்றவும் கூடாது. அப்படி ஏமாற்றுபவர்களை நாம் விடப் போவதும் இல்லை. ஆகவே, எழுச்சி பெற்ற இளைஞர்கள், எதிர் காலத்தை உருவாக்க வேண்டிய சிற்பிகள், நீங்கள் பெரியார் வழியில், அண்ணா வழியில், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் வழியில், திராவிட முன்னேற்றக் கழக வழியில் வீறு நடைபோட்டு சமுதாயச் சீர்திருத்தங்களை, சமுதாயப் புரட்சிகளை இந்த நாட்டில் உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்."

என்னைப் பொறுத்தவரையில், நான் ஒரு கிராமத்திலே பிறந்தவன். தஞ்சை மாவட்டத்தில் திருக்குவளை என்ற ஒரு சின்னஞ்சிறு கிராமத்தில் பிறந்தவன். இன்றைக்குத்தான் அந்த ஊருக்கு

நம்முடைய மத்திய அரசினுடைய உதவியினால் ஒரு பல்கலைக் கழகம் வந்திருக்கிறது. இன்றைக்குத்தான் அந்த ஊருக்கு ஒரு மருத்துவ மனை வந்திருக்கிறது. அப்படிப்பட்ட சின்னஞ்சிறு குக்கிராமத்திலே பிறந்து, ஒவ்வொரு நாளும் என்னுடைய வீட்டிலேயிருந்து ஏழு கல் தொலைவில் உள்ள ரயிலடிக்குச் சென்று, ரயில் ஏறி பிறகு திருவாரூரிலே போய் படித்துக்கொண்டிருந்தவன் நான். அப்படி ஏறத்தாழ கிராமவாசியாகவே இருந்த என்னை, இன்றைக்கு உங்களுடைய முதலமைச்சராக ஆக்கியிருப்பது எது என்றால், என்னுடைய தலைமை அல்ல, என்னுடைய சக்தி அல்ல. ஏதோ அந்தராத்மா, ஆண்டவன் சக்தி என்றெல்லாம் கருதி என்னை நானே ஏமாற்றிக் கொள்ள விரும்பவில்லை. என்னை இந்த நிலைக்கு உயர்த்தியிருக்கிறீர்கள் என்றால் – நான் எவ்வளவு எச்சரிக்கையாகச் சொல்கிறேன் பாருங்கள், மறந்து விடக்கூடாது – உயர்த்தியிருக்கிறீர்கள் என்றால், நீங்கள்தான் என்னை இந்த அளவிற்கு உயர்த்தியிருக்கிறீர்கள். இங்கே உட்கார்ந்து இருக்கின்ற ஒவ்வொருவரும் எழுந்து நின்று, ஒவ்வொருவருடைய தோளையும் கொடுத்து, ஒரு தோள் மீது ஏறி, இன்னொரு தோள் மீது ஏறி, இன்னொரு தோள் மீது ஏறி இப்படி உச்சிக்கு வந்தவன் நான். ஆகவே, உங்கள் தோள்தான் எனக்கு இன்றைக்கு அடிபீடமாக இருக்கின்ற தோள். ஏன்? எதற்காக? உங்களுக்காகப் பாடுபட, உங்களுக்காகப் பணியாற்ற, தமிழ்நாட்டிலே பிற்படுத்தப்பட்டவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள், தலித்துகள், ஆதி திராவிடர்கள், அருந்ததியர்கள் என்றெல்லாம் பிரிக்கப்பட்டுக் கிடந்த இந்த அருமையான சமுதாயத்தை ஒன்றுபடுத்தி, மனிதனில் நீயும் மனிதன்; மண்ணன்று! என்று உணர்த்தி மனித சமுதாயத்திலே நம்மைக் கலக்கச் செய்த மாபெரும் இயக்கம்தான் சுயமரியாதை இயக்கம். அந்த இயக்கத்தை வழித் தோன்றலாகக் கொண்டு உருவானதுதான் நீதிக்கட்சி. அந்த நீதிக்கட்சி போதித்த சமுதாயச் சிந்தனை, சமூகநீதி – இவைகளின் அடிப்படையிலே பிறந்ததுதான் திராவிடர் இயக்கம். அந்தத் திராவிடர் இயக்கத்தின் கிளைதான் திராவிட முன்னேற்றக் கழகம். இந்தத் "திராவிட" என்ற சொல்லை நாம் நாட்டிலே பரப்புவதற்கும், மக்களுடைய மனங்களிலே பதிய வைப்பதற்கும், எதிர்க்கட்சிக்காரர்களுடைய ஏளனங்களுக்குப் பதிலளிப்பதற்கும், விளக்கமளிப்பதற்கும், விளக்கமளித்து நிலை நாட்டுவதற்கும் எப்பாடு பட்டிருக்கிறோம் என்று சொல்ல முடியாது. "திராவிட என்ற சொல்லே கிடையாது" என்று சொன்னார்கள்.

"திராவிட என்ற வார்த்தையே கிடையாது" என்று கூறினார்கள். "திராவிட என்ற இனமே கிடையாது". பெரியாருடைய கூற்று அது, அண்ணாதுரையின் கூற்று, கருணாநிதியின் கூற்று என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். இன்றைக்கு "திராவிட" என்பது, புதிதாக கட்சி ஆரம்பிப்பவர்களெல்லாம் சேர்த்துக் கொள்ள வேண்டிய ஒரு அவசியமான வார்த்தையாக ஆகி விட்டிருக்கிறது என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது. அந்த அளவிற்கு "திராவிட" என்ற சொல்லுக்கு பெருமை ஏற்பட்டிருக்கிறது. ஆனால், அதே நேரத்திலே அந்தச் சொல்தான் எதிரிகளுக்கு எரிச்சலைக் கிளப்பியிருக்கிறது. அந்தச் சொல்தான் இந்த இயக்கத்தை எப்படியாவது அழிக்க வேண்டும் என்ற வெறித்தனத்தை பகைவர்களுக்கு ஊட்டியிருக்கிறது. அதைத்தான் நான் உங்களுக்கு விளக்க விரும்புகின்றேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சாதனைகளைப் பற்றியெல்லாம் இங்கே சொன்னார்கள். நான் தொடக்கத்திலே குறிப்பிட்டதைப் போல, தஞ்சை மாவட்டத்திலே, சின்னஞ்சிறு கிராமத்திலே, திருக்குவளை என்ற சிற்றூரிலே பிறந்த எனக்கு, என்னுடைய சுற்றுப்புறம், சுற்றுச் சூழல் எப்படி இருந்தது என்றால்– நான் இங்கே சொல்ல விரும்புகின்றேன், என்னுடைய அருமை கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள் யாராகிலும் இந்தக் கூட்டத்திலே இருக்கக்கூடும். வராமல் இருக்க மாட்டார்கள். அவர்கள் அறிவைத் தேடி அலைபவர்கள். அவர்கள் இருப்பார்கள் என்ற நம்பிக்கையோடு சொல்கின்றேன். அந்தச் சின்னஞ்சிறு கிராமத்திலே விவசாயத் தொழிலாளர்களுடைய போராட்டம் நடைபெற்றபோது – மணலி கந்தசாமி போன்றவர்கள் போர்க்களத்திலே நின்று அந்தப் போராட்டத்தை நடத்தியபோது, சீனிவாசராவ் போன்றவர்கள், ஆதிதிராவிட விவசாயிகளுக்காக போர்க்கொடி உயர்த்தியபோது, அந்தப் போர்க்கொடியின் நிழலில் நின்றவன் நான். எனவே, இளமைக் காலத்திலே என்னுடைய உள்ளத்தை ஆதிக்கம் செலுத்தியது, கம்யூனிசத் தத்துவம்தான். ருஷ்ய நாட்டு லெனினுடைய போதனைகள் தான். ஸ்டாலினுடைய செயல்கள்தான் என்னுடைய இருதயத்தை அன்றைக்கு ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது. அந்தக் காலகட்டத்தில் எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த பெரிய பெரிய மிராசுதாரர்கள், மிட்டாதாரர்கள், குட்டிக் குபேரர்கள் இவர்களெல்லாம் எந்த அளவிற்கு ஆதிதிராவிடத் தொழிலாளர்களை, விவசாயிகளை பாடுபடுத் தினார்கள், என்னென்ன கடுமையான தண்டனைகளையெல்லாம் கொடுத்தார்கள் என்றால், குற்றம் செய்த ஒரு தலித் விவசாயியை,

"கூலிக்காரா! நீ குற்றம் செய்தாயா, இல்லையா?" என்று கேட்டு, அந்த விவசாயி அதை நிரூபிப்பதற்கு முன்பே, சாணிப் பாலை காய்ச்சி, சுண்டக்காய்ச்சி, கொதிக்கக் கொதிக்க அந்தச் சாணிப்பாலால் அந்த ஆதிதிராவிடத் தோழனை குளிப்பாட்டுவார்கள். அவன் துடித்துத் துவளுவான். அந்தக் காட்சியையெல்லாம் நான் கண்டிருக்கின்றேன். அதனுடைய விளைவு, கருணாநிதியை ஒரு கம்யூனிஸ்ட்காரனாக அன்றைக்கு ஆக்கியது. அப்படியானால், "இன்றைக்கு நீ கம்யூனிஸ்ட்டா, இல்லையா?" என்று கேட்பீர்களேயானால், இன்றைக்கும் நான் கம்யூனிஸ்ட்தான். கம்யூனிஸ்ட் கட்சியிலேதான் கம்யூனிசம் இல்லையே தவிர, என்னிடத்திலே கம்யூனிசம் இருக்கிறது.

தி.மு.க. செய்த தவறு என்ன என்று கம்யூனிஸ்ட்களால் கூற முடியுமா?

கம்யூனிஸ்ட் கட்சி கம்யூனிசத்தைத் துறந்து வெகு நாளாயிற்று. ஏன் நீங்கள் அங்கேயெல்லாம் போக வேண்டியதில்லை. கடந்த முறை நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் நாங்கள், சி.பி.எம்., சி.பி.அய்., காங்கிரஸ் ஆகிய இந்தக் கட்சிகளெல்லாம் ஒன்றாக இணைந்து தேர்தலிலே போட்டியிட்டோம். இப்பொழுது இந்தத் தேர்தலிலே என்ன நிலைமை? நாங்கள் விலக்காமலே அவர்களாகவே – சி.பி.அய்., சி.பி.எம். ஆகிய கட்சிகள் அவர்களாகவே ஒதுங்கிக் கொண்டிருக்கிறார்கள். என்ன காரணம்? நான் அவர்களைக் கேட்க விரும்புகின்றேன். தனியாக one to - one என்று சொல்வார்களே, அப்படிக்கூட அந்தக் கட்சிகளின் தலைவர்களிடத்திலே பேசுவதற்கு நான் தயாராக இருக்கின்றேன். தி.மு.க. எந்தக் கொள்கையிலே உங்களிடமிருந்து பிறழ்ந்தது? தி.மு.க. எந்தத் தத்துவத்திலே உங்களிடமிருந்து தவறியது? ஏன் நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து – "நாங்கள் ஜெயலலிதாவோடு இருப்போம்" என்று சொல்கிறீர்கள்? என்று நான் கேட்க விரும்புகின்றேன். இதற்கு அவர்கள் என்ன பதில் சொல்ல முடியும்? என்ன தவறு செய்தேன் என்று குற்றம் சாட்டிவிட்டு, என்னை ஒதுக்கி வைத்தால், நான் ஒதுங்கிக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஆனால், எந்தக் குற்றமும் என் மீது சாற்ற முடியாமல்; ஒரே ஒரு குற்றம் – சோனியா காந்தி தலைமையிலே உள்ள காங்கிரஸ் கட்சியோடு நாங்கள் அணி சேர்ந்திருக்கிறோம், கூட்டணி வைத்திருக்கிறோம் என்ற ஒன்றைத் தவிர எங்கள் மீது வேறு என்ன சொல்ல முடியும்? அது என்ன தவறான கூட்டணியா? நீங்கள் வைக்காத கூட்டணியா? சி.பி.அய்., சி.பி.எம்., தி.மு.க. எல்லாக்

கட்சிகளும் சேர்ந்துதான் காங்கிரசோடு கூட்டணி வைத்து அகில இந்திய அரசியலிலே பெரு வெற்றியைப் பெற்றோம். மறக்க முடியுமா? பிறகு என்னதான் நடந்தது? வடக்கே இருக்கிற கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் பிரகாஷ் காரத் எனக்கு அருமையான நண்பர். அந்த பிரகாஷ் காரத் அவர்களும், இந்த மாநிலத்திலே சென்னையிலே இருந்து அரசியல் நடத்தி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவைப் பெற்று ராஜ்ய சபா உறுப்பினராகி இருக்கின்ற நண்பர் டி.ராஜா அவர்களும் என்னிடத்திலே வந்து பேசினார்கள். அதுதான் ஆரம்பம். "நீங்கள் காங்கிரஸ் கட்சி அணியிலே இருக்கக் கூடாது" என்றார்கள். "ஏன்?" என்று கேட்டேன். "அவர்கள் அணுசக்திப் பிரச்சினையில் அமெரிக்காவோடு உடன்பாடு செய்து கொண்டிருக் கிறார்கள். அதை அவர்கள் கைவிட்டால்தான் அவர்களோடு கூட்டணியில் இருக்க முடியும்? என்றார்கள். "அதைப்பற்றி நான் அவர்களிடம் பேசுகிறேன். அதற்காக ஏன் கூட்டணியைக் கலைக்க வேண்டும்? மதவாத சக்திகளை எதிர்த்து, பிற்போக்கு சக்திகளை எதிர்த்து, ஜாதியை அடிப் படையாகக் கொண்ட சக்திகளை எதிர்த்து, ஒரு கூட்டணி உருவாக்கினோம். இந்தியாவில் ஒரு பெரும் புரட்சியைச் செய்து, அந்தக் கூட்டணிக்கான வெற்றியைப் பெற்றோம். இப்போது திடீரென்று அமெரிக்காவை காரணம் காட்டி, அணுகுண்டை காரணம் காட்டி, காங்கிரசிலே இருந்து நீங்கள் பிரிவது என்றால் சரியல்ல. நீங்கள் உற்ற காரணங்களைச் சொல்லுங்கள். நான் சோனியா காந்தி அம்மையாரிடம் பேசுகிறேன், மன்மோகன்சிங் அவர்களோடு பேசுகிறேன், பிரணாப் முகர்ஜியோடு பேசுகிறேன்" என்று சொன்னேன். நான் சொன்னவாறு அவர்களோடு பேசினேன், இரண்டு மூன்று முறை பேசினேன். அந்தப் பேச்சுக்குப் பிறகு திடீரென்று கம்யூனிஸ்ட் தலைவர்கள் என்னை வந்து சந்திப்பதையும், பேசுவதையும் நிறுத்தி விட்டார்கள். சென்னைக்கு வருவார்கள், வீட்டிலே சந்திப்பார்கள், கட்சி அலுவலகத்திலே சந்திப்பார்கள், தலைமைச் செயலகத்திலே சந்திப்பார்கள், இப்படி இரண்டு அல்லது மூன்று முறை சந்தித்துப் பேசிய பிரகாஷ் காரத்தும், சி.பி.அய். நண்பர் ராஜாவும் என்னிடத்திலே பேசுவதை திடீரென்று நிறுத்தி விட்டார்கள்.

தொழிலாளர்களை வேட்டையாடிய ஜெயலலிதாவோடு சேர்ந்தது நியாயமா?

ஏன் என்று பிறகு விசாரித்தால், நான் காங்கிரசை ஆதரிக்கப் போகிறேன் என்று இவர்கள் ஒரு கற்பனையைச் செய்து கொண்டு,

அதனால் இனி மேல் கருணாநிதியிடம் பேசி புண்ணியம் இல்லை என்று விலகிக்கொண்டார்கள். விலகுவதற்கு முன்பு, ஓர் உடன்பாடு குறித்து பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்த கட்சிகளின் தலைவர்கள், "நாங்கள் இனிமேல் உங்களோடு உடன்பாடு கொள்ள முடியாது. எங்களால் இதை ஜீரணிக்க முடியாது. ஆகவே, விலகிக்கொள்கிறோம்" என்று சொன்னதுண்டா? இல்லை. பேசிக் கொண்டிருக்கும்போதே, இவர்கள் வெளியேறிவிட்டார்கள். வெளியேறி அடுத்ததாக, "தி.மு.கழக அரசு பாட்டாளிகளுக்கு எதிரான அரசு. தொழிலாளர்களுக்கு எதிரான அரசு" என்று அறிக்கை விட்டார்கள். நான் கேட்டேன், "ஏன் நீங்கள் இல்லாததைச் சொல்லுகிறீர்கள்? தொழிலாளர்களுக்கு எதிராக நாங்கள் என்ன சொல்லிவிட்டோம். நீங்கள் என்ன தொழிலாளர்களுக்கு ஆதரவான கட்சியுடனா போய்ச் சேர்ந்திருக்கிறீர்கள்? அந்த அம்மையார் முதலமைச்சராக இருந்த போது, தொழிலாளர்களை எல்லாம் துடிக்கத் துடிக்க வேட்டை ஆடியவர் அல்லவா? அங்கே போய்ச் சேருகிறீர்களே, என்ன நியாயம்?" என்று கேட்டபோது, பதிலே சொல்லாமல், அவர்களுடைய பத்திரிகைகளிலும் சரி, கூட்டங்களிலும் சரி, தி.மு.கழக அரசை கண்டபடி தூற்றவும், என்னுடைய சொந்த விவகாரங்களைப் பற்றிப் பேசவும், எனது குடும்பத்தைப் பற்றிப் பேசவும், என்னுடைய மனைவியைப் பற்றி எழுதவும் என்கின்ற அளவிற்கு உச்சக் கட்டத்திற்கே சென்று விட்டார்கள். நான் இப்போதும் கேட்கின்றேன்; நீங்கள் அப்படிச் செல்ல வேண்டிய காரணம் என்ன? நீங்கள் சென்றாலும் பரவாயில்லை, அந்தக் காரணத்தையாவது சொல்லுங்கள். நீங்கள் சொல்லக்கூடிய ஒரே காரணம், நாங்கள் காங்கிரஸ் கட்சியோடு உடன்பாடு கொள்கின்றோம் என்பதுதான். அந்த உடன்பாடு ஒன்றும் புதிதல்ல. நீங்களும் சேர்ந்து செய்து கொண்ட உடன்பாடுதான் அது. அந்த உடன்பாட்டை நீங்கள் முறித்துக்கொண்டு, அதற்குக் காரணம் நாங்கள் என்று சொன்னால், அதை ஏற்க நான் தயாராக இல்லை என்பதை மாத்திரம், என்னுடைய அருமை கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். இங்கே தம்பி பொன்முடி சொன்னார். தொழிலாளர்களுடைய பிளவின் காரணமாக என்ன ஆயிற்று? தமிழ்நாட்டிலே போக்குவரத்துத் தொழிலாளர்களுடைய தேர்தல் நடைபெற்று, அந்தத் தேர்தலில் அய்ந்து ஆறு சங்கங்கள் போட்டியிட்டு, நாம் ஒன்றாக இருந்த கூட்டணியை முறித்துக்கொண்டு, சி.பி.அய்.

சார்பாக ஒரு சங்கம், தே.மு.தி.க. அது ஒரு சங்கம், இப்படி பல பிரிவுகளாகி அதிலெல்லாம் போய் சேர்ந்துகொண்டு – இதிலே மறுமலர்ச்சி வேறு, அதெல்லாம் சேர்ந்து கொண்டு – இன்றைக்கு என்ன ஆயிற்று?

தொழிலாளர் சங்கத் தேர்தலில் கம்யூனிஸ்ட் சார்புடைய சங்கம் என்ன ஆனது?

லட்சக்கணக்கான தொழிலாளர்கள் இருக்கின்ற ஒரு பெரிய நிறுவனம், அந்தப் பேருந்து தொழிலாளர் களுடைய பெரிய சங்கத்தை பிளவுபடுத்தி, அய்ந்து ஆறு கட்சிகளின் சார்பாக போட்டியிட்ட காரணத்தால் – கம்யூனிஸ்ட் சங்கம், கம்யூனிஸ்ட் சார்புடைய சங்கம் வெற்றி பெற முடியாமல், தி.மு.கழகச் சார்புடைய சங்கம் பெரு வெற்றியைப் பெற்று வருகிறது என்ற செய்தியை கேள்விப்படு கிறோமே, அதற்காக நான் மகிழ்ச்சி அடையவில்லை. இங்கே பொன்முடி போன்றவர்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள். ஆனால், நான் அதற்காக மகிழ்ச்சி அடையவில்லை. "அய்யோ, இடதுசாரி இயக்கத்தினுடைய தோழர்கள், அந்த அமைப்பின் சார்பாகப் போட்டியிட்டு வெற்றி பெறாமல் போய் விட்டார்களே!" என்ற சங்கடம் தான் எனக்கு. தொழிலாளர்களுடைய போராட்டத்திலேயாவது ஒன்றாக இருந்திருக்கலாமே– அந்த அளவிற்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது – திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் மீது அவர்களுக்கு வெறுப்பு, எரிச்சல். இது காங்கிரசை எதிர்த்து செய்த விஷயமல்ல. திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய லட்சியத்திற்கு எதிராக நடைபெறுகிற காரியம். ஏனென்றால், "திராவிட" என்ற சொல்லுக்கு இன்று நேற்றல்ல, பல்லாண்டு காலமாகவே இந்த எதிர்ப்பு இருந்து வருகிறது.

விதைக்காமலே விளையும் கழனி ஆரியம் என்றார் அறிஞர் அண்ணா

என்றைக்கு நாங்கள் "திராவிட" என்று சொல்ல ஆரம்பித்தோமோ, அன்றைக்கே ஒரு பக்கத்திலே இருந்து ஆரியம் படமெடுக்க ஆரம்பித்து விட்டது. ஆரியம் தன்னை யாரென்று காட்டிக் கொள்ளாமல் படமெடுக்க ஆரம்பித்தது. ஒரு நாடகத்திலே அண்ணா அவர்கள் ஆரியத்தைப் பற்றிச் சொல்வார் – விளக்கி விட்டுச் சொல்வார் – "விதைக்காமலே விளையும் கழனி" என்று சொல்வார். எது என்று கேட்டால், "அதுதான் அம்மா ஆரியம்" என்பார். "சந்திரமோகன்" நாடகத்தில் இத்தகைய உரையாடல்களை அண்ணா அன்றைக்கே

தீட்டினார். அதுதான் இன்றைக்கும் செயல்படுத்தப்படுகிறது. அதைத்தான் நாங்கள் கம்யூனிஸ்ட் கட்சியிடத்திலே கேட்கிறோம். இத்தகைய இன உணர்வை உருவாக்கிய இந்த இயக்கத்தை, அதன் காரணமாகவே அழிக்க நினைக்கிற சிலரோடு நீங்களும் சேர்ந்து கொண்டு அதற்காக புஜபல பராக்கிரமத்தைக் காட்டுகிறீர்கள் என்றால். நாங்கள் எப்படி அதைப் பொறுத்துக் கொள்ள முடியும் என்றுதான் கேட்கிறோம். திராவிட முன்னேற்றக் கழகம் இன்றைய தினம் காங்கிரசோடு கூட்டணியில் இருக்கிறது என்றால், தமிழகத்திலே, இந்தியாவிலே இரு பெரும் அரசுகள் – இங்கே மாநில அரசு, மத்திய அரசு என்று இருபெரும் அரசுகள் இருப்பதை அறிந்துதான் கூட்டணியில் இருக்கின்றோம்.

காங்கிரசில் நம்மை விரும்பாத சில விஷமிகள்
கழகக் கூட்டணிக்கு எதிராகச் செயல்படுகிறார்கள்!

மத்திய அரசு மாநில அரசுக்கு உறுதுணையாக இருக்கிறது – மாநில அரசு மத்திய அரசுக்கு உறுதுணையாக இருக்கிறது. இதை ஏற்றுக் கொள்ள வேண்டும். சில காங்கிரஸ்காரர்கள்கூட இதை ஏற்றுக் கொள்ள வேண்டும். எப்படி மத்திய அரசு மாநில அரசுக்கு துணையாக இருக்கிறதோ, அதே போல மாநில அரசு மத்திய அரசுக்குத் துணையாக இருக்கிறது. இதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். இதை காங்கிரஸ்காரர்கள் சிலர் ஏற்றுக் கொள்ள வேண்டும். சிலரால் ஜீரணிக்க முடியாத நிலை. ஏனென்றால், திராவிட முன்னேற்றக் கழகம் இங்கே கூட்டணிக்குத் தலைமை வகிப்பது சிலருக்குப் பிடிக்கவில்லை. அதனால், ஏதேதோ பேசுகிறார்கள். அதை தட்டிக் கேட்கவும், அடக்கவும் டில்லியிலே இருக்கின்ற தலைவர்கள், பெரியவர்கள் வர வேண்டியிருக்கிறது – அல்லது அவர்கள் சொல்ல வேண்டியிருக்கிறது. ஆனால், இங்கே இருக்கின்ற சில விஷமிகள், தூண்டிவிட்டு திராவிட முன்னேற்றக் கழகத்தோடு இருக்கின்ற உறவை எப்படியாவது கெடுக்க வேண்டும் என்று எண்ணுகின்றார்கள். அப்படிக் கெடுத்தால், இந்த உறவைத் துண்டித்தால், அது யாருக்கு நஷ்டம் என்றால் துண்டிக்கின்றவர்களுக்குத்தான் நஷ்டமாகும். இன்னும் சொல்லப்போனால், துண்டிக்கின்றவர்களுக்கும், துண்டிக்கப் படுகின்றவர்களுக்கும் சேர்த்து இரண்டு பேருக்கும் நஷ்டம். ஏனென்றால், நாம் இரு சக்திகளும் மதவாத சக்திகளை எதிர்க்கின்ற சக்திகள். நாம் இருவரும் ஜாதி துவேஷங்களை ஏற்றுக் கொள்ளாத சக்திகள். காங்கிரசாக இருந்தாலும். கழகமாக இருந்தாலும் நாம்

என்றென்றும் மதவாதத்தை இந்தியாவிலோ தமிழகத்திலோ நுழைவதற்கு அனுமதிக்காதவர்கள். நமக்குள்ளே ஒரு பிளவை ஏற்படுத்தினால், மதவாதம் சுலபமாக உள்ளே நுழைய முடியும் என்று மதவாதத்தினால் மகிழ்ச்சியடைந்து கட்டிப் புரண்டு கொண்டி ருப்பவர்கள், இந்தச் சந்தர்ப்பத்தைப் பொன்னான சந்தர்ப்பமாகக் கருதி உள்ளே நுழைந்து விடுவார்கள். ஆகவேதான் நான் சொல்லுகின்றேன். மதவாதத்தை இன்றைக்கு எதிர்த்து நிற்கின்ற, விரும்பாத, வெறுக்கிற சக்தி தி.மு. கழகம். அந்தக் கழகம் காங்கிரசுடன் கொண்டிருக்கின்ற உடன்பாடு, அதை மேலும் வலுப்படுத்திக் கொள்வதற்காகத்தானே தவிர, வேறல்ல என்பதை சிண்டு முடிபவர்களுக்கு, பிணக்கை ஏற்படுத்த வேண்டும் என்று கருதுபவர்களுக்கு நான் அறிவுரையாகச் சொல்லுகின்றேன். அதே நேரத்தில் மேலே இருப்பவர்கள் இவர்களையெல்லாம் இனியும் துளிர் விடாமல், இனியும் இப்படிப்பட்ட பேச்சுக்களை யெல்லாம் பேசி இருப்பதைக் கெடுத்துவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய பெரும் பொறுப்பு மேலே உள்ளவர்களுக்கும் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். ஏதோ பெரிய கூட்டம் கூடியிருக்கின்றது. இந்தக் கூட்டத்தைப் பார்த்ததும் கருணாநிதிக்கு எல்லாம் பேச வேண்டும் என்று தோன்றிவிட்டது போலிருக்கிறது என்று கருதுவார்களேயானால், அது தவறு. நான் இதைவிடப் பெரிய கூட்டத்தையெல்லாம் பார்த்தவன். இதைவிட பெரிய மாநாடுகளை யெல்லாம் கண்டவன். அந்த மாநாடுகளிலும், கூட்டங்களிலும் எனக்கு எவ்வளவு அடக்கம் இருந்ததோ, அந்த அடக்கத்திலே கிஞ்சிற்றும் குறைவில்லாமல், அந்த அடக்கத்தோடுதான் இன்றைக்கும் நான் பேசுகின்றேன். நாம் ஒன்றாக இருந்தால்தான், இந்திய அரசும் தமிழகத்திலே இருக்கின்ற தமிழக அரசும் கைகோத்துக் கொண்டு மதவாதத்தை எதிர்த்தால்தான், மதவாதத்தை அழிக்க முடியும் – அதை மாண்டு போகச் செய்ய முடியும். அந்த உறுதியை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்ற அதே நேரத்தில், தற்கால அரசியலைப் பற்றிய ஒன்றிரண்டு செய்திகளைச் நான் சொல்ல வேண்டியவனாக இருக்கின்றேன்.

ஜனநாயகத்தை மதித்து இராசா பதவி விலகினார்!

இப்பொழுது ஸ்பெக்ட்ரம் – ஸ்பெக்ட்ரம் என்று ஒரு பேச்சு அடிபடுகிறது. அதில், நம்முடைய கழக அமைச்சர் தம்பி இராசாவைப் பற்றி நாடாளுமன்றத்தில் ஒரு சந்தேகத்தைக் கிளப்பி தினந்தோறும்

கூச்சல் போட்டார்கள். நாடாளுமன்றம் என்பது கூச்சல் போடுகிற இடம் அல்ல. நாடாளுமன்றம் என்பது கூடிப் பேசுகிற இடமே தவிர, கூச்சல் போடுகின்ற சந்தை அல்ல. என்ன வேண்டும் என்று கேட்டபோது, இராசாவை ராஜினாமா செய்யச் சொன்னால், நாடாளுமன்றம் நிம்மதியாக நடக்குமா? அப்படி நடக்குமேயானால், அதற்கு உறுதி உண்டென்றால், எங்கள் இராசா ராஜினாமா செய்யத் தயாராக இருக்கிறார். இந்தப் பதவி பெரிதல்ல. நாடாளுமன்ற ஜனநாயகம்தான் பெரிது என்ற முறையிலே இராசா, ராஜினாமா செய்தார்.

அதற்குப் பிறகு என்ன கேட்கிறார்கள்? நாடாளுமன்ற கூட்டுக் குழு விசாரணை வேண்டும் – ஜெ.பி.சி. குழு (Joint Parliament committee) விசாரணை வேண்டும் என்று கேட்கிறார்கள். அறிவார்ந்த வேலூர் பகுதி மக்களே, அரசியல் தெரிந்த நண்பர்களே, இந்தியாவினுடைய சரித்திரம் புரிந்தவர்களே, சுதந்திரத்திற்குப் பிறகு இந்தியாவிலே ஏற்பட்ட அரசியல் நிகழ்வுகளையெல்லாம் தெளிவாக உணர்ந்த வர்களே, உங்களுக்கு ஞாபகப்படுத்துகின்றேன். "முந்த்ரா ஊழல்" என்று ஒரு பெரிய ஊழல். "முந்த்ரா ஊழல்" – அதில் டி.டி.கிருஷ்ணமாச் சாரியார் என்ற நிதியமைச்சருக்குத் தொடர்பு உண்டு என்று அவர்மீது குற்றம் சாற்றப்பட்டது, நாடாளுமன்றத்தில். உடனே அந்த டி.டி.கிருஷ்ணமாச் சாரியாரை காங்கிரஸ் கட்சி ராஜினாமா செய்ய அறிவுரை கூறியது. அவர், ராஜினாமா செய்தார். அதோடு, அவருடைய ராஜினாமாவோடு "முந்த்ரா" ஊழல் பற்றிய நாடாளுமன்ற விவாதங்கள், கூச்சல், குழப்பங்கள் ஓய்ந்தன. ஏன்? டி.டி.கிருஷ்ணமாச்சாரியார் ராஜினாமா செய்தவுடன் நாடாளுமன்றத்திலே கூச்சல் இல்லை – குழப்பம் இல்லை. அவரைப் பற்றி மோசமான விமர்சனங்கள் இல்லை. தமிழ்நாட்டிலே அப்போது அவரைப் பற்றி எழுதுவதற்கு ஆனந்த விகடனுக்கு கை ஓடவில்லை. கல்கிக்கு கை ஓடவில்லை. தினமணிக்கு கை ஓட வில்லை – நிறுத்திக் கொண்டார்கள் – முடிந்து விட்டது. "முந்த்ரா ஊழல்" வெறும் முணுமுணுப்போடு முடிந்துவிட்ட ஊழலாக ஆகிவிட்டது. நான் சொல்கிறேன், இன்றைக்கு இராசாமீது குறையே இருக்கட்டும். ராஜினாமா செய்த பிறகு, டி.டி.கிருஷ்ணமாச்சாரியைப் பற்றி வந்த முந்த்ரா ஊழல் நின்று விட்டது. இராசா மீது பேசப்பட்ட இந்த ஸ்பெக்ட்ரம் ஊழல் மாத்திரம் இன்னும் பேசப்படுகிறதே என்ன காரணம்? இராசா தலித். டி.டி.கிருஷ்ணமாச்சாரியார் – அவரது பெயரிலேயே இருக்கிறது ஆச்சாரியார். ஆச்சாரியாருக்கு ஒரு நியாயம் – ஆதி திராவிடருக்கு ஒரு நியாயமா? இதுதான் இந்தியாவிலே

சமதர்மமா? கூச்சல் போடுகின்ற கட்சிகளைக் கேட்கிறேன். ஒன்றை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். என்னுடைய அரசில் தி.மு.கழக அரசில் உமாசங்கர் என்கிற ஒரு ஆதி திராவிடத் தோழர் – அவர் ஆதி திராவிடரா அல்லவா என்பது விசாரணையில் இருக்கிறது. அவர்மீது ஒரு புகார் வந்தபோது, அதை நாங்கள் கேட்டோம் – விளக்கம் கேட்டோம் அவரிடத்திலே. விளக்கம் கேட்டவுடன் இந்த கம்யூனிஸ்ட் டுகள், அ.தி.மு.க. எம்.பி.க்கள் எல்லாம், "ஆஹா! உமாசங்கர் தலித் என்ற காரணத்தால், ஆதி திராவிடர் என்ற காரணத்தால் அவரை ஒழிக்கப் பார்க்கிறார் கருணாநிதி" என்றெல்லாம் சொன்னார்கள். ஒன்றும் ஒழிக்கவில்லை. இவர்களுடைய எதிர்ப்பைக் கண்டதும் என்றே எடுத்துக் கொள்ளட்டும். அல்லது நியாயமாக சட்டரீதியாக செய்யப்பட்ட காரியம் என்று எடுத்துக் கொள்ளட்டும். தற்காலிகமாக விலக்கப்பட்டிருந்த அவரை மீண்டும் பணியிலே சேர்த்து ஆணை பிறப்பித்தது இந்தக் கருணாநிதிதான். தலித் என்பதற்காக அடியோடு பழி வாங்க வேண்டும் என்று எண்ணவில்லை – தலித் ஆயிற்றே என்று எதிர்க் கட்சிக்காரர்கள் சொன்னவுடன், ஆமாம் – தலித்துதான். இருந்தாலும், பிறகு விசாரித்துக் கொள்ளலாம். இப்போது அவர் மீண்டும் பதவிக்கு வரட்டும் என்று அவரை பதவியிலே அமர்த்தி யிருப்பது இந்தக் கருணாநிதிதான்.

பத்திரிகைகள் வேண்டுமென்றே
ஊழல் என்று எழுதுகிறார்கள்

நீங்கள் யோசித்துக் கொள்ள வேண்டும் – தலித், இங்கே ஒரு மாடல் – அங்கே ஒரு மாடல். அவர்களை நடத்துவதற்கு தி.மு.க. கையாளுகின்ற முறையும், தி.மு.க. அல்லாத வேறு கட்சிகள், மதவாதக் கட்சிகள், ஏன் இன்னும் சொல்லப் போனால் கம்யூனிஸ்ட் கட்சிகளே கூட கையாளுகின்ற முறையும் எப்படி வித்தியாசப்படுகின்றது என்பதை தயவுசெய்து நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இதிலே தவறு நடைபெற்றிருக்கிறதா இல்லையா? அதற்கு விசாரணைகள் நடைபெறுகின்றன. சி.பி.அய்.விசாரணை, நீதி மன்ற விசாரணை எல்லாம் நடைபெறுகிறது. அந்த விசாரணை நடைபெற்று முடிந்தபிறகு, அந்த விசாரணையின் முடிவு என்ன இருக்கிறதோ, அதற்கேற்ப திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய முடிவைச் செய்யும். இராசா தன்னுடைய முடிவை அறிவிப்பார். அது வேறு விஷயம். அதற்கு

இடையிலே இந்த அளவிற்கு வெறியாட்டம் போடுகிறார்களே? பத்திரிகையைப் புரட்டினால், ஏதோ இமயமலையே கவிழ்ந்துவிட்டதைப் போல ஏதேதோ பேசுகிறார்களே – ஒரு பத்திரிகையிலே சைபர் சைபர் சைபர் என்று ஏழு சைபர் போட்டு, இத்தனை லட்சம் கோடி ரூபாய் ஊழல் என்று போடுகிறார்கள். அத்தனை லட்சம் கோடி ரூபாய் ஊழல் என்று நிரூபிக்க முடியுமா? முடியாது. வேண்டுமென்றே மக்களை பயமுறுத்துவதற்காக இத்தனை லட்சம் ரூபாய் ஊழல் என்கின்றார்கள். நான் கேட்கின்றேன். நீதிமன்றத்தில், பெங்களூரு நீதிமன்றத்தில் ஜெயலலிதா சொத்துக்குவிப்பு வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 66 கோடி அவர் முறைகேடாக சேர்த்திருக்கிறார் என நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கண்டுபிடிக்கப்பட்ட ஊழல் பணம் இவ்வளவு என்று இன்னமும் வழக்கு, ஏறத்தாழ பத்து வருடங்களாக வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஓராண்டா? ஈராண்டா? பத்தாண்டு காலம். அவர்களுடைய வழக்கு என்றால் தள்ளிக் கொண்டே போகும். அந்த வழக்கு பத்தாண்டாக நடைபெற்று இன்னமும் தீர்ப்புக் கூறப்படவில்லை. தீர்ப்பு கூறப்படுவதற்கு முன்பு இன்னும் என்னென்ன வாய்தா வாங்குவார்களோ தெரியாது. மொழி பெயர்ப்பு சரியில்லை என்று சொல்வார்கள் – சாட்சி சரியாக வரவில்லை என்று சொல்வார்கள் – வந்த சாட்சி நொண்டிக் கொண்டு வந்தார் என்று சொல்வார்கள் – வந்த சாட்சி போட்ட கையெழுத்து சரியில்லை என்று சொல்வார்கள். இப்படியெல்லாம் எதையாவது சாக்குப் போக்குச் சொல்லி, வழக்கு நீடித்து நீடித்து 12 ஆண்டுகாலம் 13 ஆண்டுகாலமாக வழக்கு நடைபெற்று வருகிறது. சொத்துக் குவிப்பு வழக்கு. ஏறத்தாழ 2 கோடியே ஒரு லட்சத்து 85 ஆயிரம் ரூபாய் சொத்தோடு ஆரம்பிக்கப்பட்ட முதலமைச்சருடைய வாழ்க்கை – முதலமைச்சர் என்றால் என்னைக் கருதிக் கொள்ளாதீர்கள். முன்னாள் முதலமைச்சருடைய வாழ்க்கை, 2 கோடியே ஒரு லட்சத்து 85 ஆயிரம் ரூபாயிலே ஆரம்பிக்கப்பட்ட வாழ்க்கை 68 கோடி ரூபாய் – 70 கோடி ரூபாய் என்ற அளவிற்கு சொத்துக் குவிப்பு என்று நிரூபிக்கப்பட்டு, அதற்கான தீர்ப்பு வழங்கப்படவிருக்கிறது. ஆனால், வழக்கை முடிப்பதற்கு அவர்கள் விரும்பவில்லை. ஒத்திப் போட்டுக் கொண்டே இருக்கிறார்கள். ஒத்திப் போடுகின்ற காரணங்களைத் தேடித் தேடி, நீதிபதியிடத்திலே சொல்லிச் சொல்லி வலியுறுத்திக் கொண்டேயிருக்கிறார்கள்.

ஜெயலலிதா ஊழலை தினமணி

போன்ற ஏடுகள் திரும்பிப் பார்க்காததேன்?

நான் கேட்கின்றேன் – இன்றைக்குக் கின்னாரம் கொட்டுகின்ற பந்திரிகைகளைக் கேட்கின்றேன் – டமாரம் அடிக்கின்ற பத்திரிகைகளைக் கேட்கின்றேன், மணியோசை முழங்குகின்ற தினமணி போன்ற ஏடுகளைக் கேட்கின்றேன், மலர் என்ற பெயரோடு துர்நாற்றம் வீசுகின்ற பத்திரிகைகளைக் கேட்கின்றேன் – நீங்களெல்லாம் பெங்களூரு பக்கம் கொஞ்சம் திரும்பிப் பார்க்கக்கூடாதா? அந்த நீதிபன்றத்திலே என்ன நடக்கிறது என்று கேட்பது தவறா? ஜெ.பி.சி. குழு (Joint Parliament committee) விசாரணை வேண்டும் என்று கேட்டவர்கள், இந்திய நாட்டினுடைய அரசியல் சரித்திரத்தில் முந்த்ரா ஊழலுக்குப் பிறகு அது வெளிப்பட்ட பிறகு அதைப் பற்றி விசாரிக்க ஜெ.பி.சி. வேண்டும் என்று நாடாளுமன்றத்தைக் குழப்பத்திலே ஆழ்த்தியது உண்டா? இல்லை. நான் முதலிலே சொன்னதைப் போல, அது ஆரியம். இது திராவிடம். ஆரியம் என்றால் ஒன்று. திராவிடம் என்றால் ஒன்று. தம்பி துரைமுருகன் அதைப் பற்றி இங்கே பேசினார். அது ஒரு யுத்தமே நடக்கிறது இப்போது. 1971ஆம் ஆண்டு தந்தை பெரியார் "இப்போது நடைபெறுவது திராவிட – ஆரிய யுத்தம்" என்று சொன்னார். பெரியார் என்ன? இராமாயணத்தைப் பற்றி எழுதிய பண்டித ஜவகர்லால் நேரு அவர்களே, 'தேவாசுர யுத்தம் என்பது தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் நடந்த யுத்தம்' என்று ஒரு வாதத்திலே எழுதியிருந்தாலும்கூட, 'இது திராவிடர்களுக்கும், ஆரியர்களுக்கும் நடந்த போராட்டம்தான்' என்று ஜவகர்லால் நேரு தனது மகளுக்கு எழுதிய கடிதம் என்ற புத்தகத்திலே எழுதி யிருக்கிறார்.

ஆரிய - திராவிட யுத்தம் இப்போது

அரசியல் ரீதியாக அறிவிக்கப்பட்டிருக்கிறது!

இப்பொழுது அரசியல் ரீதியாக அந்தப் போராட்டம் அறிவிக்கப் பட்டிருக்கிறது. அதைத் தாங்க வேண்டிய, அதைச் சமாளிக்க வேண்டிய பெரும் பொறுப்பு நம்முடைய தோள்களுக்கு வந்திருக்கிறது. நம்முடைய தோள் வீரத்தோள்தான். ஆனால், தமிழன் வீரத்தை நிலைநாட்டிய அளவிற்கு, விவேகத்தைப் பயன்படுத்தியது இல்லை. விவேகத்தைப் பயன்படுத்தாத காரணத்தால், வீரம் இருந்தும் தமிழன் – திராவிடன் தன்னுடைய வலிவை, தன்னுடைய ஆட்சியை,

தன்னுடைய அதிகாரத்தை இழக்க நேரிட்டது. அத்தகைய வீழ்ச்சி திராவிடத்திற்கு ஏன் ஏற்பட்டது? திராவிடனுக்கு ஏன் ஏற்பட்டது என்பதை எண்ணிப் பார்த்து, அந்த வீழ்ச்சியிலேயிருந்து நம்மைத் தடுப்பதற்கு, நம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்கு, எதிர்கால சமுதாயத்தை – நம்மையல்ல, இங்கே பேசியவர்கள் எல்லாம் சொன்னதைப்போல், எனக்கு 87 வயது ஆகிவிட்டது. எதிர்காலச் சமுதாயம் என்றால் உங்கள் பேரன் பேத்திகள் அவர்கள் எல்லாம் வாழ்வதற்கு, அவர்கள் வைத்திருப்பது உண்மையான மீசைதான் – ஒட்டுமீசையல்ல. உண்மையான மீசைதான் என்று இவ்வுலகத்திற்கு நிலைநாட்டிக் காட்டுவதற்கு தமிழன் வாழ்ந்தான் – அவனை வீழ்த்துவதற்கு ஏதேதோ மோசடிகள் செய்யப்பட்டன. அவைகளை யெல்லாம் வீழ்த்தி விட்டு, தமிழன் இன்று ஓரணியில் திரண்டான் என்ற உறுதியான நிலையை ஏற்படுத்துவதற்கு திராவிட முன்னேற்றக் கழகம் கைநீட்டுகிறது. இந்தக் கழகத்தினுடைய கையைப் பிடித்துக் கொண்டு, சமுதாயத்திலே இருக்கின்ற ஏழை – எளியவர்கள், பாட்டாளி மக்கள், ஆடவர் – பெண்டிர், உழவர் பெருமக்கள், நெசவாளிகள், சிறுபான்மைச் சமுதாயத்தினர், தேய்ந்தோர் – இன்னும் தேய்ந்து கொண்டிருப்போர் அவர்களெல்லாம், அத்தனை பேரும் இந்த திராவிட சமுதாயத்தை எழுச்சி பெறச் செய்வோம் – ஆரியத்தினுடைய சூழ்ச்சியினை வெல்வோம் – அதற்கு என்றைக்கும் அடிபணிய மாட்டோம் என்கின்ற உறுதியினை எடுத்துக் கொள்வோம் என்று உங்களையெல்லாம் நான் கேட்டுக் கொண்டு, சமுத்திரம் போல் வேலூர் பொதுக்கூட்டத்திலே நீங்கள் திரண்டிருக்கின்ற இந்தக் காட்சியைக் கண்டு நான் மீண்டும் மீண்டும் நம்பிக்கை பெறுகிறேன். ஆறாவது முறை – ஏழாவது முறை என்றார்கள். எல்லா முறையும் நாம் தான். அந்த நிலையை நாம் அனைவரும் சேர்ந்து உருவாக்க வேண்டும் என்று சூளுரைப்போம்! என்று கேட்டுக் கொண்டு விடைபெறுகின்றேன்.

– இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

(நன்றி: "முரசொலி" 28.11.2010)

தமிழகத்திலே வளர்த்துக் கொண்டிருக்கின்ற திராவிடக் கலாச்சாரத்தை இந்தியா முழுமையும் வளர்ப்போம்!

நாகப்பட்டினத்தில் 10-10-2010 ஞாயிறு மாலை லட்சக்கணக்கானோர் திரண்ட பொதுக்கூட்டத்தில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய எழுச்சி உரை!

நாகை காடம்பாடியில் லட்சக்கணக்கானோர் திரண்ட மாபெரும் பொதுக்கூட்டத்தில் முத்தமிழறிஞர் – முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பங்கேற்று எழுச்சிமிகு உரையாற்றினார்.

முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:–

இன்றைக்கு தமிழகத்தில் வளர்த்துக்கொண்டிருக்கின்ற திராவிடக் கலாச்சாரம், நாகரிகத்தை இந்தியா முழுமையும் வளர்ப்போம் என்றும் தி.மு.கழகத்தை ஒழிக்க யார் அடியெடுத்து வைத்தாலும் அந்த அடி நொறுங்கிப்போகும் என்றும் குறிப்பிட்டார். மேலும் முதல்வர் கலைஞர் அவர்கள் தமது உரையில், சிறுதாவூர் தலித் நில மீட்பு நடவடிக்கை குறித்து என்னிடம் மனு கொடுத்த மனசாட்சி உள்ள மார்க்சிஸ்டுகளே எண்ணிப் பாரீர் என்றும் குறிப்பிட்டார்.

நாகையில் நடைபெற்ற பிரம்மாண்டமான பொதுக் கூட்டத்தில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:–

வெள்ளம்போல் குழுமியிருக்கும் இந்த பிரம்மாண்டமான பொதுக்கூட்டத்தினுடைய தலைவர் ஏ.கே.எஸ். விஜயன் எம்.பி. அவர்களே, உரையாற்றி அமர்ந்துள்ள அமைச்சர் பெருமக்களே, உரையாற்றி விளக்கங்கள் தரவேண்டிய வாய்ப்பை உருவாக்காத அமைச்சர் பெருமக்களே, திருவாரூர் – நாகை மற்றும் இந்த வட்டாரத்திலே உள்ள கழக அமைப்புகளின் நிருவாகிகளே, நாடாளுமன்ற கழகக் குழுவின் தலைவர் தம்பி டி.ஆர்.பாலு அவர்களே, என்னுடைய பழம் பெரும் நண்பர் – இந்த இயக்கத்தின் ஆரம்பக் காலம் தொட்டு இதுவரையில் தன்னுடைய இசையால் எதிரிகளையும் இசைய வைத்த பெருமதிப்பிற்குரிய நாகூர் அனீபா அவர்களே, பிறந்த நாள் விழா பரிசு பெற்று அமர்ந்துள்ள அருமை நண்பர் எஸ்.பி.டி. தங்கையா அவர்களே, விலகி வந்து வேறிடம் சென்று மீண்டும் திராவிடப் பாசறை இதுதான் என்று உணர்ந்து வருகை தந்துள்ள அழகு.திருநாவுக்கரசு போன்ற அருமை நண்பர்களே, இன்றைக்கு இந்தக் கூட்டத்திலும் ஒரு திருநாவுக்கரசு இந்தக் கூட்டணியில் இணைந்திருக்கின்ற செய்தியை வியந்து போற்றுகின்றேன்.

நாடாளுமன்ற, சட்டப்பேரவை முன்னாள் – இந்நாள் உறுப்பினர்களே, கழக முன்னணி நண்பர்களே, தாய்மார்களே, பெரியோர்களே, என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புக்களே!

உயிரினும் மேலான உடன்பிறப்புக்களே என்று நான் இப்போதெல்லாம் தொடக்கத்தில் சொல்ல விரும்புவதில்லை. ஏனென்றால் அந்த ஒரு வார்த்தைக்கு மாத்திரம் காத்திருந்து அதைச் சொன்னவுடன் வீட்டுக்குப் போகலாமா என்று எண்ணி சென்று விடுகின்ற உடன்பிறப்புக்களையும் நான் அறிந்தவன் என்ற காரணத்தினால், எனக்கு முன்னால் பேசிய நம்முடைய கழகத் தினுடைய முன்னணி தளபதிகளெல்லாம் எடுத்துக் காட்டியதைப் போல், தம்பி ஏ.கே.எஸ்.விஜயன் அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டு, அவருடைய உழைப்பின் அடையாளமாக, அவருடைய ஆற்றலின் வடிவமாக இந்த மாபெரும் மக்கள்திரளை இங்கே நாம் காண முடிகின்றது.

வருகிற வழியெல்லாம் இந்தக் கூட்டத்தினுடைய தாக்கத்தை நாங்கள் உணர்ந்தோம். எனக்கு நாகப்பட்டினம் புதிய ஊர் அல்ல,

இங்கே நம்முடைய நண்பர்கள் எடுத்துக்காட்டியதைப் போல், ஒரு காலத்தில் ஒவ்வொரு அமாவாசை நாளிலும் என்னை அழைத்து, அன்றைக்கு திராவிடர் கழகத்தின் தளபதிகளில் ஒருவரான நண்பர் ஆர்.வி. கோபால் கூட்டம் நடத்துவது வாடிக்கை. அமாவாசை வரத் தவறினாலும் தவறும். அந்த நேரங்களிலே நான் கலந்து கொள்கின்ற கூட்டங்கள் என்றைக்கும் தவறியதில்லை. அப்படி மாதா மாதம் பேசிய நான் – இங்கே இன்றைக்கு வரும்போது நீண்ட இடைவெளிக்குப் பிறகு வருகிறேன் என்ற காரணத்தால், நீங்கள் வந்து என்னை சந்திக் கிறீர்கள் என்று அல்ல, எத்தனை முறை தன்னுடைய வீட்டுச் செல்வத்தை, தன்னுடைய குழந்தையை தூக்கி வைத்துக்கொண்டு கொஞ்சினாலும், தாய்க்கு மனநிறைவு ஏற்படாதோ அதைப்போல எத்தனை முறை என்னை அழைத்து, அழைத்து கூட்டம் போட்டாலும் உங்களுக்கும் தெவிட்டப் போவதில்லை, எனக்கும் தெவிட்டப் போவதில்லை.

அந்த அளவிற்கு இந்த மாவட்டத்தில் – அதிலும் குறிப்பாக நாகை மாவட்டத்தில் நான் தொடர்புடையவனாக அந்தக் காலத்தில் இருந்து இந்தக் காலம் வரையில் இருக்கிறேன். அதைத்தான் தம்பி பொன்முடி இங்கே பேசும்போது, சொந்த மாவட்டத்திற்கு வருகின்ற மகிழ்ச்சியை தலைவருடைய முகத்திலே காண முடிந்தது என்று சொன்னார். நானும் சொந்த மாவட்டங்களுக்கு என்னை அழைப்பவர்களுடைய முக மலர்ச் சியை ஆங்காங்கே பார்த்திருக்கிறேன். அதிலே பொன்முடியும் ஒருவர் என்பது நான் பட்டியலிட்டு வைத்திருக்கின்ற பெயர்களிலே ஒன்று.

சுயமரியாதை உணர்வோடு தமிழர்கள்
வாழவேண்டுமென்பதற்காக உருவானது தி.மு.க.

யாருக்குத்தான் சொந்த மாவட்டங்களிலே நடக்கின்ற நிகழ்ச்சியைப் பற்றி மகிழ்ச்சி இருக்காது. அது பற்றிய புத்துணர்ச்சி இருக்காது என்பதை நடத்தியவர்கள் நன்றாக அறிவார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஏதோ ஓர் அரசியல் காரணத்துக்காக உருவாக்கப்பட்ட இயக்கம் அல்ல என்பதை நான் பலமுறை விளக்கியிருக்கிறேன். இது ஒரு சமுதாய இயக்கம். தந்தை பெரியார் அவர்கள் சுயமரியாதை உணர்வோடு தமிழர்கள் வாழ வேண்டும், திராவிட இன உணர்வை அவர்கள் பெற வேண்டும் என்பதற்காக பாடுபட்டதை எண்ணிப் பார்த்து – அந்தப் பயிற்சிப் பாசறையிலே பயின்று – அவருடைய வழிநின்று தொண்டாற்ற உருவாக்கப்பட்டது

தான் – பேரறிஞர் அண்ணா அவர்களால் 1949 ஆம் ஆண்டு தோன்றிய இந்த திராவிட இயக்கம் – திராவிட முன்னேற்றக் கழகம்.

இந்த கழகத்தைக் கட்டிக் காக்கின்ற பெரும் பொறுப்பு நமக்கெல்லாம் உண்டு. இந்தக் கழகம் இன்றைக்கு அரசியலிலே பெற்றிருக்கின்ற வெற்றிகளை மாத்திரமல்ல, சமுதாயத் துறையிலே பெற்றிருக்கின்ற வெற்றிகளையெல்லாம் நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள். ஒரு காலத்திலே தீண்டாமை என்ற ஒரு கொடுமைக்கு ஆளாகி, அவர்கள் கிட்டே வரக்கூடாது எட்டித்தான் நிற்க வேண்டும் என்றெல்லாம் துரத்தப்பட்ட சாதாரண சாமானிய மக்கள் இன்றைக்கு சமமாக உட்கார்ந்து அவர்களும் மற்றவர்களும் உயர்குலத் தோரும் ஒரே பகுதியில் சமத்துவபுரத்திலே வாழ்கிறார்கள் என்றால், அதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சமுதாயக் கொள்கையாகும்.

சிறுபான்மை சமுதாய மக்களுக்கு, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு பாதுகாப்பு அரணாக இருப்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகம். உங்களுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகின்றேன். சான்றுகளோடு சொல்ல விரும்புகிறேன். அண்மையில் கழக அரசு இஸ்லாமிய மக்களுக்கு 3.5 சதவிகித இட ஒதுக்கீடு தந்தது. அதை சில பேர் கேலி பேசினார்கள், கிண்டல் செய்தார்கள். எதிர்த்தும் அறிக்கை விட்டார்கள். அப்படிப்பட்டவர்கள் இன்றைக்கு உணர்ந்து கொள்ள வேண்டும். அவர்களுடைய கருத்துக்கு காதுகொடுத்த இஸ்லாமியப் பெருமக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

சிறுபான்மை மக்கள் தி.மு.கழக அரசு அளித்த இடஒதுக்கீட்டினால் பயனடைந்தனர்

அவர்களுக்கு 3.5 சதவிகித இடஒதுக்கீடு வழங்கிய காரணத்தால் தமிழ்நாட்டில் – இந்த ஆட்சியில் பொறியியல் கல்லூரிகளில் மாணவர்களின் சேர்க்கை 5034 பேர் பொறியியல் கல்லூரிகளிலே மாணவர்களாக இஸ்லாமியப் பெருமக்கள் சேர்ந்திருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கும்போது இந்தத் திட்டம் திராவிட முன்னேற்றக் கழக அரசால் உருவாக்கப்பட்ட போது – அறிவிக்கப்பட்ட போது கேலி செய்தவர்கள், கிண்டல் செய்தவர்கள், எதிர்த்தவர்கள், இதற்காக வேறு வேறு நிகழ்வுகளில் மறைமுகமாக நம்மைத் தாக்கி எழுதியவர்கள், பேசியவர்கள், அதனாலேயே நம் மீது விரோதம் கொண்டவர்கள். நாம் ஏதோ சிறுபான்மை என்கின்ற பெயரால்

இஸ்லாமிய மக்களுக்கு நன்மை செய்கிறோம் என்று எடுத்துக் கொண்டு அதை எதிர்த்தவர்கள், அவர்களுடைய எதிர்ப்பு உண்மைதானோ என்று முஸ்லிம் மக்கள் கருதியபோது, நான் அவர்களுக்கு அளித்த உத்தரவாதம் பொறுமையாக இருங்கள், நீங்கள் எத்தகைய லாபத்தை உங்களுடைய சமுதாயத்திற்கு – எதிர்காலத்து மக்களுக்கு அடைய இருக்கிறீர்கள் என்பதை பார்க்கத் தான் போகிறீர்கள் என்று சொன்னேன். அதற்கு ஏற்ப 2010ஆம் ஆண்டிலே மாத்திரம் பொறியியல் கல்லூரிகளிலே மாணவர்களின் சேர்க்கை 5034 பேர் இஸ்லாமிய மாணவர்கள் இடம் பெற்றிருக் கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிப்பட்ட லட்சியங்கள் தி.மு.கழக ஆட்சியிலே ஒன்றல்ல, இரண்டல்ல.

இது நாகப்பட்டினம் – பழைய ஒன்றிணைந்த நாகப்பட்டினம் மாவட்டம் – நாகப்பட்டினம் என்றால் நான் நாகர்கோவிலிலே சில வாரங்களுக்கு முன்பு பேசும்போது குறிப்பிட்டேன். இதுதான் உண்மையான திராவிட இனத்தினுடைய பூர்வீக மாவட்டம். திராவிட இனத்தினுடைய நாகர் என்று ஒரு வகுப்பினர் இருந்தார்கள். அந்த நாகர்கள் வாழ்ந்த பூர்வீக இடம் இன்றைக்கு லெமூரியா கண்டம் என்று அழைக்கிறோமே அந்தக் கண்டம்தான், அந்த லெமூரியா கண்டத்தினுடைய மக்கள்தான் லட்சக்கணக்கான, பல்லாயிரக் கணக்கான வருடங்களுக்கு பிறகு கொஞ்சம், கொஞ்சமாக மாறுதல் அடைந்து, அவர்கள் திராவிட நாகரிகத்திற்கு உரியவர்கள் என்று விளங்குபவர்கள். அப்படி விளங்குபவர்களை உதாரணத்திற்கு சொல்லவேண்டுமானால், இன்றைக்கும் நாகர்கள் தமிழகத்தினுடைய பூர்வீகக் குடிகள் என்பதற்கு அடையாளமாகத்தான் நாகர்கோவில், திருநாகேஸ்வரம், நாகப்பட்டினம் என்கின்ற இந்த ஊர்களெல்லாம் 'நாகர்', 'நாக' என்ற அடைமொழியோடு அழைக்கப்பட்டிருக்கின்றன – இன்றைக்கும் அழைக்கப்படுகின்றன. அந்த நாகர்களுடைய பரம்பரையிலே வந்து, திராவிடர்களாக, திராவிட நாகரிகத்துக்குச் சொந்தக்காரர்களாக இருக்கின்ற நாம், குறிப்பாக இந்தப் பகுதியிலே நாகப்பட்டினத்திலே வாழ்கின்ற நாம் திராவிட இன கலாச்சார நாகரிக, பண்பாடு அத்தனைக்கும் சொந்தக்காரர்கள். இதை அழிக்க, ஒழிக்க சிலர் – ஏற்றத்தாழ்வில் நம்பிக்கை உள்ளவர்கள் – சில பேர் கங்கணம் கட்டிக் கொண்டு இந்த மக்களை தங்களுக்கு அடிமைகளாக ஆக்கிக்கொள்ள வேண்டும் என்று கருதியவர்கள் ஏமாந்து

விட்டார்கள். அப்படி ஏமாந்ததற்குக் காரணம் வேறு யாருமல்ல, தந்தை பெரியார், அவர் வழி வந்த பேரறிஞர் அண்ணா, அவர்கள் வழி நின்று இயக்கம் நடத்துகின்ற நாம். நாம் இருக்கின்ற காரணத்தால்தான் நம்மால் ஏற்பட்ட அந்த மறுமலர்ச்சிதான் தந்தை பெரியாருடைய எண்ணத்தை, பேரறிஞர் அண்ணாவினுடைய கருத்தை வெற்றி பெறச் செய்த திராவிட இயக்கம் இன்றைக்கு இந்தியாவிலே கேள்விக் குறியாக அல்ல. ஆச்சரியக்குறியாக மாறியிருக்கிறது.

திராவிட இயக்கமா? திராவிடனா? என்று கேள்வி கேட்டவர்கள், இப்பொழுது திராவிட இயக்கமா! என்று ஆச்சரியத்தோடு பார்க்கிறார்கள். இன்னும் கொஞ்சம் காலத்திற்கு பிறகு திராவிட இயக்கம் – நான் நாகப்பட்டினத்திற்கு சொல்லுகின்றேன். இப்பொழுது தமிழகத்திலே இருக்கிறது. தென் பகுதியிலே இருக்கிறது, தென் இந்தியாவிலே இருக்கிறது. ஆரம்ப காலத்திலே திராவிடன் இந்தியா முழுவதும் வாழ்ந்தான். இன்றைக்கு இங்கே காணுகின்ற இந்த எழுச்சி எதிர்காலத்திலே இந்தியா முழுவதும் திராவிட உணர்வை, திராவிட இயக்கத்தினுடைய அந்தத் தாக்கத்தை நிச்சயமாக ஏற்படுத்தும் என்று இந்த மாபெரும் பொதுக்கூட்டத்திலே அறைகூவல் விடுத்து வெளியிட விரும்புகின்றேன்.

திராவிட இயக்கம் என்பது ஏதோ ஒரு சில பதவிப் பொறுப்புகளை ஏற்க வேண்டும் என்பதற்காக அல்ல. தேர்தலிலே நிற்க வேண்டும் என்பதற்காக அல்ல. இந்த இயக்கத்தை அறிஞர் அண்ணா தொடங்கியபோது, பெரியார் சொன்னார், இவர்களெல்லாம் தேர்தலிலே நிற்கக் போகிறார்கள் என்று. நாங்கள் சொன்னோம், நாங்கள் தேர்தலில் நின்றாலும், அதிலே வென்றாலும் எங்களுடைய கொள்கை அய்யா அவர்களே, பெரியார் அவர்களே உங்களால் ஊட்டப்பட்ட அந்தக் கொள்கைகளை வெற்றிபெறச் செய்வதற்காகத் தான் நாங்கள் பாடுபடுவோம், பணியாற்றுவோம் என்று உறுதி எடுத்துக் கொண்டோம். அந்த உறுதியை நிறைவேற்றுகின்ற வகையிலேதான், இன்றைக்கு தி.மு.கழக அரசு செயல்பட்டு வருகிறது. நான் நாகப்பட்டினம் மாவட்டத்தில் – திருவாரூர் மாவட்டம் இணைந்த இந்த பகுதியில் விவசாயிகள் நிரம்பிய இந்த வட்டாரத்தில் தி.மு.கழக அரசு விவசாயிகளுக்காக – வேளாண் துறையில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருப்பவர்களுக்காக ஆற்றி உள்ள பணிகள் சிலவற்றைச் சொல்ல விரும்புகின்றேன்.

நண்பர்களெல்லாம் எடுத்துக் காட்டியதைப் போல ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய்க்கு வழங்குகிற திட்டம், இன்றைக்கு நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கிறது. 22 இலட்சத்து 40 ஆயிரத்து 739 விவசாயக் குடும்பங் களுக்கு ஏழாயிரம் கோடி ரூபாய் கூட்டுறவுக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டது. நான் ஆட்சிப் பொறுப் பேற்று முதலமைச்சராக கோட்டைக்குச் சென்று கையெழுத்திடுவதற்கு முன்பு ஆட்சிப் பொறுப்பேற்று உறுதிமொழியில் கையெழுத்திட்ட அந்த நேரத் திலேயே அடுத்த கையெழுத்துபோட்டேனே அது விவசாயிகளுடைய கடன் 7,000 கோடி ரூபாய் தள்ளுபடி என்ற கையெழுத்துத்தான். விவசாயி களுக்கான பயிர்க் கடன் வட்டி 2005 – 2006இல் வட்டி 9 சதவிகிதம் என்று இருந்ததை 2006 – 2007இல் கழக அரசில் 7 சதவிகிதமாகப் பயிர்க் கடன் வட்டியைக் குறைத்தேன். 6 லட்சத்து 31 ஆயிரத்து 283 பேருக்கு 1250 கோடியே 65 லட்சம் ரூபாயும், 2007 – 2008இல் 5 சதவிகிதமாகக் குறைத்து 6 லட்சத்து 48 ஆயிரத்து 397 பேருக்கு 1,393 கோடியே 97 லட்சம் ரூபாயும், 2008 – 2009இல் மேலும் 4 சதவிகிதமாக பயிர்க் கடன் வட்டியைக் குறைத்து 6 லட்சத்து 92 ஆயிரத்து 192 பேருக்கு 1,570 கோடியே 99 லட்சம் ரூபாயும், 2009 –10இல் பயிர்க் கடன் வட்டியையே ரத்து செய்து 8 லட்சத்து 98 ஆயிரத்து 540 பேருக்கு 2169 கோடியே 48 லட்சம் ரூபாயும், நடப்பாண்டில் 30.9.2010 வரை 4 லட்சத்து 43 ஆயிரத்து 320 பேருக்கு 1,340 கோடியே 23 லட்சம் ரூபாயும் என 2006–க்கு பின் மொத்தம் 33 லட்சத்து 12 ஆயிரத்து 732 விவசாயிகளுக்கு 7 ஆயிரத்து 778 கோடியே 29 லட்சம் ரூபாய் பயிர்க்கடன்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை விவசாயப் பெருங்குடி மக்கள் நிறைந்திருக்கின்ற இந்தக் கூட்டத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

2005 – 2006 இல் நெல் கொள்முதல் ஒரு குவிண்டாலுக்கு 600 ரூபாய், கழக அரசு அதை உயர்த்தி 2010 – 2011–இல் சாதாரண நெல் விலை 1050 ரூபாய். சன்ன ரக நெல் விலை 1,100 ரூபாய் என வழங்குகிறது.

பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் 2006இல் 50 சதவிகிதம் காப்பீட்டுத் தொகையை அரசே மானியமாக வழங்கி ஊக்கப்படுத்தியதால் 2005 – 2006இல் ஒரு லட்சம் விவசாயிகள் பயனடைந்த நிலையில், 2009 – 2010 ஆம் ஆண்டில் 7 லட்சத்து 80 ஆயிரம் விவசாயிகள் அரசின் மானிய உதவி பெற்று பயிர்க் காப்பீடு செய்தார்கள். கடந்த 4 ஆண்டுகளில் விவசாயிகளுக்கு 891 கோடி ரூபாய் இழப்பீட்டுத்

தொகை பயிர்க் காப்பீட்டுக்காக வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் இங்கே மிகவும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

கரும்பு விவசாயிகளுக்கு 2005 – 2006இல் டன் ஒன்றுக்குக் கிடைத்த விலை 1,014 ரூபாய்., 2009 – 2010இல் போக்குவரத்துக் கட்டணத்தையும், ஊக்கத் தொகையையும் சேர்த்துடன் ஒன்றுக்கு 1,650 ரூபாய் என உயர்த்தப்பட்டது. 2010 – 2011 முதல் இப்பொழுது 2 ஆயிரம் ரூபாய் என கரும்பு விவசாயிகளுக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. கழக அரசு விவசாயிகளுக்கு வழங்கும் உதவிகளால் உணவு தானிய உற்பத்தி 2005 – 2006இல் 61 லட்சம் டன், 2008 – 2009இல் 91 லட்சம் டன் என்பதை மறந்துவிடக் கூடாது. யாரோ சொன்னதாக தம்பி துரைமுருகன் சொன்னார் – தமிழ்நாடு படு பாதாளத்திற்குச் சென்றிருக்கிறது என்று சொன்னதாகச் சொன்னார். அது உண்மைதான். நாங்கள் பாதாளத்திற்குப் போக வேண்டிய காரணம், வறண்ட காலத்தில் கூட பூமிக்கு அடியில் இருக்கின்ற தண்ணீரை யெல்லாம் எடுத்து மழையில்லாத நேரங்களில் பயிர் செய்வதற்காக நாங்கள் பாதாளம் வரையிலே செல்கின்றோம். இல்லை என்று மறுக்கவில்லை. அந்த அளவிற்கு விவசாயத்தைப் பெருக்கவே வேளாண்மைத் தொழிலை இந்தியாவினுடைய பெரிய தொழில்களில் ஒன்று என்ற அந்த கருத்துடன், அந்த நம்பிக்கையுடன் அதை வளர்க்க வேண்டும், அதிலே ஈடுபட்டிருக்கின்றவர்களை வாழ வைக்க வேண்டும் என்பதற்காகத்தான், நாங்கள் இந்த அரசை விவசாயத் தொழிலாளர்களுக்கு, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு உரிய அரசாக நிருவகித்து வருகின்றோம். ஆனால், நண்பர்கள் இங்கே எடுத்துக்காட்டியதைப் போல், கம்யூனிஸ்ட் நண்பர்கள் இதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அவர்கள் ஏற்றுக்கொள்கின்ற காலம் வரும். ஏனென்றால், நான் பலமுறை எடுத்துச் சொன்னதைப்போல இந்த வட்டாரத்திலே உள்ள விவசாயிகளுக்கு பண்ணையாளர்களால், முதலாளிகளால், மிராசுதாரர்களால் இழைக்கப்பட்ட கொடுமை களையெல்லாம் கண்டித்து போராட்டம் நடத்தியவன் நான். அந்தப் போராட்டங்களில் ஈடுபட்டவன்தான் நான். அப்படிப்பட்ட நான், விவசாயிகளுக்கு எதிராக கம்யூனிசத்திற்கு எதிராக அல்ல; கம்யூனிசம் வேறு, கம்யூனிஸ்ட் வேறு, கம்யூனிசம் என்பது ஒரு கொள்கை. கம்யூனிஸ்ட் என்பது அந்தக் கொள்கைகளை ஏற்றுக் கொண்டு கொடி பிடிப்பவர். நான் சொல்லுகின்ற கம்யூனிசத்தைப் புரிந்துகொள்ள வேண்டும்.

கம்யூனிசக் கொள்கைகளுக்கு எதிராக இருக்கிறார்கள் - இன்றைய கம்யூனிஸ்டுகள்

ரஷ்யாவிலே உதயமான கம்யூனிசக் கொள்கை, மார்க்சியக் கொள்கை புனிதமானது. ஏழைகளை வாழ வைக்கக்கூடியது. தொழிலாளர்களுக்கு உதவக்கூடியது. அவர்களுடைய தோளை உயர்த்தக்கூடியது. அவர்களுடைய உழைப்புக்கு பெருமை அளிக்கக் கூடியது. ஆனால் இந்தியாவில், குறிப்பாக இப்பொழுது உள்ள கம்யூனிஸ்டுகள் இருக்கிறார்களே, அவர்கள்தான் அந்த கம்யூனிசத் துக்கு எதிரிகளாக இன்றைக்கு இந்தியாவிலே இருக்கிறார்கள். நான் அண்ணன் ஜீவானந்தம் அவர்களை அறிவேன். நான் தஞ்சை மாவட்டத்திலே விவசாயிகளுக்காகப் பாடுபட்ட சீனிவாச ராவ் போன்றவர்களை அறிவேன், தோழர் கல்யாணசுந்தரத்தை அறிவேன், விவசாயிகளுக்காக பாடுபட்ட ராமமூர்த்தி போன்ற நண்பர்களை யெல்லாம் அறிவேன். ஆனால் அவர்கள் வேறு, இன்றைக்கு இருக்கின்ற கம்யூனிஸ்டுகள் வேறு என்பதை எண்ணும்பொழுது, நான் மிகுந்த மனக் கவலை அடைகின்றேன். ஏனென்றால் ஒரே ஒரு உதாரணம் சொல்லுகின் றேன். ஒரு மூன்று நான்கு ஆண்டுகளுக்கு முன்பு, கம்யூனிஸ்ட் கட்சிகளுடைய தலைவர்கள் – அதிலும் குறிப்பாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் ஊர்வலமாக வந்து, ஒரு மனுவை முதலமைச்சராக இருந்த என்னிடம் கொடுத் தார்கள். அந்த மனுவிலே என்ன எழுதியிருந்தார்கள் என்றால், இன்னார் சென்னைக்கு அருகில் உள்ள பஞ்சமர்களுடைய நிலத்தை – தலித் மக்களுடைய நிலத்தையெல்லாம் சுரண்டிக் கொண்டிருக் கிறார்கள். ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை வெளியேற்றி நீதி வழங்க வேண்டும் என்று என்னிடத்திலே ஒரு மனுவைக் கொடுத்தார்கள். நான் யார் எவர் என்றெல்லாம் சொல்ல விரும்பவில்லை. அப்படி சொல்வதை கம்யூனிஸ்ட் நண்பர்களும் விரும்பமாட்டார்கள். ஏனென்றால், அவர்களுக்கு ரொம்ப எரிச்சலை உண்டாக்கக் கூடிய பெயர் அது. அதனால் நான் சொல்ல விரும்பவில்லை. ஊரை மாத்திரம் சொல்கிறேன். ஊர் பெயர் சிறுதாவூர்.

அந்த ஊரிலே உள்ள நிலங்களையெல்லாம் சுருட்டிக் கொண்டு, ஆக்கிரமித்துக் கொண்டு, ஏழை எளிய பாட்டாளி மக்களை, தொழிலாளிகளை, உழவர்களை இவர்களுடைய நிலங்களையெல்லாம் ஆக்கிரமித்து வீடு கட்டிக் கொண்டு – பங்களா கட்டிக் கொண்டு வாழ்கிறார்கள். அவர்களை உடனே வெளியேற்ற வேண்டும் என்று மனு

கொடுத்தார்கள். கொடுத்தவர்கள் சாதாரணமானவர்கள் அல்லர். கம்யூனிஸ்ட் கட்சியினுடைய பெரிய தலைவர்கள். சட்டமன்ற உறுப்பினர்கள். கட்சியினுடைய மாநில அளவிலே உள்ள செயலாளர்கள். அவர்கள் தந்த அந்த மனுவை நான் மதிக்க வேண்டுமா – வேண்டாமா? மதித்தேன்.

மதித்து நடவடிக்கை எடுக்க ஆரம்பித்தேன். முதலமைச்சர் என்ற முறையில் அரசாங்கத்தின் சார்பில் நடவடிக்கை எடுத்தால் ஒரு பத்து நாளைக்குள்ளே நிலைமை மாறிவிட்டது. இவர்கள் அந்தப் பக்கம் போய்விட்டார்கள். எந்தப் பக்கம்? சிறுதாவூர் பக்கம். இவர்கள் சிறுதாவூர் பக்கம் போய்விட்ட காரணத்தால், நாங்கள் எடுத்த நடவடிக்கைகளுக்கு அவர்களால் ஆதரவு அளிக்க முடியவில்லை. நடவடிக்கைக்கு உள்ளானவர்கள் எங்களைத் திட்டினார்கள், நாசமாகப் போங்கள் என்றார்கள். உங்களை விட்டேனா பார் என்றார்கள். எதிர்நடை போட்டார்கள். எதிர்ப்புக் கோஷம் எழுப்பினார்கள். அதற்கெல்லாம் இவர்கள் பதில் சொல்வார்கள் என்று எண்ணினால் அதற்கு எதிர்ப்புக் குரல் கொடுப்பவர்கள் யார் யார் என்று பார்த்தால், இன்றைய எதிர்க் கட்சியினுடைய தலைவி – அவர்களோடு கூட்டணி சேர துடித்துக் கொண்டு, நேரம் காலம் பார்த்துக் கொண்டு இருக்கின்ற கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், இவர்கள்தான் புகார் கொடுத்தார்கள் – பஞ்சமர்கள் நிலங்களெல்லாம், பாட்டாளி மக்கள் நிலங்களெல்லாம் பறிபோய் விட்டன. அதைப் பாதுகாத்து திரும்ப வாங்கித் தாருங்கள் என்று விண்ணப்பம் கொடுத்தார்கள்.

அந்த மனுவின்மீது நாங்கள் நடவடிக்கை எடுக்கத் தொடங்கினால், எங்களுக்கு துணை நிற்பதற்குப் பதிலாக அங்கே போய் சேர்ந்து கொண்டு எங்களை விட்டேனா பார், தி.மு.க. இனி ஆட்சிக்கே வரக் கூடாது என்கிறார்கள். ஏன்? சிறுதாவூரில் கைவைத்து விட்டோமாம். அதனால் ஆட்சிக்கு வரக் கூடாது என்கிறார்கள். இதை மனசாட்சி உள்ள கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள், உண்மையான தோழர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

சோனியா காந்திக்கு ஆதரவாக
முதல் குரல் கொடுத்தது தி.மு.கழகம்

ஏனென்றால் ஒரு அரசியலில் கூட்டணி வரலாம், போகலாம். கூட்டணி இன்றைக்கு ஒன்றும் என்னைப் பொறுத்தவரையில்

நிலையானது அல்ல. எனக்குத் தெரியும். கூட்டணிகள் சில கொள்கைகளின் அடிப்படையிலே சேருகின்றன. தி.மு.க.வுக்கும் காங்கிரசுக்கும் கூட கூட்டணி எப்போது ஏற்பட்டது? அன்னை என்று எல்லோராலும் புகழப்படுகின்ற – தியாகத் திருவிளக்கு என்று நான் அடிக்கடி கூறுகின்ற சோனியா காந்தி அவர்களை அரசியலில் இருந்தே விரட்ட வேண்டும் என்று ஒரு கூட்டம் – மதவாத கூட்டம் ஆர்ப்பரித்து எழுந்தபோது, தெற்கே இருந்து ஒரு குரல் திருமதி சோனியா காந்தி அவர்களுக்கு ஆதரவாக கேட்டது அந்தக் குரல்! தெற்கே இருந்து ஒரு கரம் நீட்டப்பட்டது. அந்தக் கரம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குச் சொந்தமான கரம். அந்தக் கரத்தை நீட்டியது நாம்தான். சோனியா காந்தி அவர்களை காப்பாற்றக்கூடிய வல்லமை படைத்தவர்கள் என்பதற்காக அல்ல. அந்தக் கரத்தை நாம் நீட்டியது – ஆண்டாண்டு காலமாக தமிழகத்தை மாத்திரமல்ல இந்திய தரணியிலேயே மதவாதத்தைக் கிளப்பி, ஜாதி பேதங்களை உருவாக்கி, மக்களை மவுடீகர்களாக ஆக்கி, அதன் காரணமாக அந்த அடிப்படையில் அரசியலை நடத்தலாம் என்று எண்ணியிருந்த பா.ஜ.க. போன்ற பிற்போக்கு இயக்கங்களுக்கு யாரும் ஆதரவு அளித்துவிடக் கூடாது, அவைகளுக்கு எதிர்ப்பாக இருக்கின்ற நடவடிக்கைகளுக்கு நாம் பக்கபலமாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்திலேதான் திருமதி சோனியா காந்தி அவர்களுக்கு கரம் நீட்டி வலுவளித்தோம். பக்கத் துணையாக நின்றோம். இன்றைக்கும் பக்கத் துணையாக இருக்கிறோம்.

இத்தகைய ஆபத்துகள் சோனியாகாந்தி அவர்களை சூழுகின்ற நேரத்திலெல்லாம் முற்போக்கு சக்திகளுக்கு ஆதரவாக என்னென்ன செய்ய வேண்டுமோ அவற்றையெல்லாம் தி.மு.கழகம் சார்பாக செய்வோம். இதில் எந்தவிதமான இருவேறு கருத்துகளுக்கும் இடம் கிடையாது.

நேற்றைக்குக் கூட அம்மையார் அவர்கள் திருச்சியில் பேசும்போது கூட்டணி மகிழ்ச்சிகரமாக இருக்கிறது என்று சொன்னார்கள். ஆம்! கூட்டணி மகிழ்ச்சிகரமாகத்தான் இருக்கிறது. தி.மு.கழகத்திற்கும் காங்கிரசுக்கும் உள்ள கூட்டணி மகிழ்ச்சிகரமாக இருக்கிறது. இது மகிழ்ச்சிகரமாக இருக்கக்கூடாது என்று எண்ணுகின்ற ஒரு சில சூழ்ச்சிக்காரர்களுக்கு – அவர்கள் அளித்த விளக்கம்.

தி.மு.க. – காங்கிரஸ் கூட்டணி என்று அவர்கள் பெயர் குறித்து விளக்கம் சொல்லாவிட்டாலும் கூட, எங்கள் கூட்டணி என்று அவர்கள் சொன்னதிலிருந்து இந்தக் கூட்டணி உதயமாகும்போது, சோனியா காந்தி அவர்களைப் பற்றி தமிழகத்திலே உள்ள எதிர்க்கட்சித் தலைவர் என்னென்ன சொன்னார் – பதிபக்தி இல்லாதவர், அதுமாத்திரமல்ல, கணவனுக்கே துரோகம் செய்தவர் என்றெல்லாம் சொன்னவர். பதிபக்தி இல்லாதவர் என்று யாரைச் சொன்னாரோ அப்படிப்பட்ட அம்மையார் அவர்கள் அதை பொருட்படுத்தாமல், அதைப் பற்றி கவலைப்படாமல் அரசியலிலே தனக்குக் கிடைத்த பெரும் பொறுப்பை – பிரதமர் பதவியையும்கூட என் கண்ணெதிரே நாங்களெல்லாம் அமர்ந்திருக்கும் போதே என்னிடத்திலே சொல்லி விட்டு சென்றார்கள். ராஷ்டிரபதி பவனுக்குச் சென்றார்கள். அங்கு சென்று பிரதமர் பதவி எனக்கு வேண்டாம் என்று சொல்லி விட்டு – பிரதமராக பதவியில் இருக்க எல்லா தகுதியும் இருந்தும்கூட, உறுப்பினர்களின் ஆதரவு நாடாளுமன்றத்தில் இருந்தும் கூட, கட்சிகளினுடைய ஆதரவு இருந்தும் கூட, நாமெல்லாம் அம்மையாரை ஆதரித்தும் கூட எனக்கு வேண்டாம், நான் கட்சித் தலைவியாகவே இருந்து விட்டுப் போகிறேன் என்று அந்தப் பதவியை உதறி எறிந்தவர் சோனியா காந்தி அவர்கள்.

அந்த சோனியா காந்தி அவர்களைப் பார்த்து, பதிபக்தி இல்லாதவர் என்று சொன்னவர்கள், இன்றைக்கு சோனியா காந்தியோடு நாங்கள் அணி சேர்வோம், அணி சேர்ந்து தி.மு.கழக ஆட்சியை கவிழ்ப்போம் என்று கூறுகிறார்கள் என்றால், நாடு எப்படிப்பட்ட விசித்திரங்களை யெல்லாம் சரித்திரத்திலே சந்திக்கிறது என்பதை தயவு செய்து நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். இவர்களுடைய பேச்சை நம்புகின்ற அளவிற்கு – இவர்களுடைய நாணயத்தை ஏற்றுக் கொள்கின்ற அளவிற்கு டில்லியிலே உள்ளவர்கள் ஒன்றும் கண்களை மூடிக் கொண்டிருப்பவர்கள் அல்லர்; பச்சைக் குழந்தைகள் அல்லர். சரித்திரம் படித்தவர்கள்தான், வரலாறு தெரிந்தவர்கள்தான்.

இவர்கள் யார் என்பதை இன்று நேற்றல்ல, கடந்த காலத்திலே இவர்கள் அமைத்த கூட்டணிகளில் எப்படியெல்லாம் இருந்தார்கள் என்பதையெல்லாம் எண்ணாதவர்கள் அல்லர். திரும்பிப் பார்க்காத வர்கள் அல்லர். ஆகவே, தி.மு.கழகத்தை ஒழிப்பது ஒன்றுதான் என்னுடைய முதல் வேலை என்று கருதிக் கொண்டு, யார் அடி எடுத்து வைத்தாலும் அந்த அடி நொறுங்கிப் போகின்ற அளவுக்கு தி.மு.கழகம்

வலுவானதாக இருக்கிறது. ஆக, யாரையும் ஏமாற்றி, பழையதை எல்லாம் மறந்து விடுங்கள் என்று மன்னிப்பு கேட்டு மண்டியிட்டு, எங்களை எதிர்க்கின்ற வாளாக, கேடயமாக அவர்களை ஆக்கிக் கொள்ளலாம் என்று இங்கே உள்ள எதிர்க்கட்சி கருதுமே யானால், அந்த எதிர்க்கட்சிக்கு லாலி பாடுகின்றவர்கள், துதி பாடுகின்றவர்கள், ஆலவட்டம் சுற்றுகின்ற வர்கள் அவர்களுக்கு நடை பாவாடை விரிப்பவர்கள் யாராயினும் அவர்களெல்லாம் ஏமாந்தே போவார்கள்.

தி.மு.கழகத்தை தேர்தலில் தோற்கடிக்க நினைப்பவர்கள் தோற்றுப்போவார்கள்

ஏனென்றால், நாங்கள் இந்த இயக்கத்தின் சார்பாக, சந்திக்காத கொடுமைகள் இல்லை. எங்களுக்கு கிடைக்காத ஏமாற்றங்கள் இல்லை. நாங்கள் பார்க்காத துரோகங்கள் இல்லை. நாங்கள் அனுபவிக்காத வேதனைகள் இல்லை. நாங்கள் செல்லாத சிறைச் சாலைகள் இல்லை, எங்களில் எத்தனை பேர் சித்திரவதைக்கு ஆளாகி சிறைச் சாலையிலே மாண்டிருக்கிறார்கள். சிட்டிபாபுவை இழந்ததை மறந்து விடமுடியுமா? தீக்குளித்துச் செத்துப் போனவர்கள் எல்லாம் எங்களுடைய மொழியைக் காப்பாற்றுவதற்காக, தமிழைக் காப்பாற்றுவ தற்காக. தமிழுக்கு ஒரு தீங்கு என்றால் அதைத் தடுத்தே தீருவேன் என்பதற்காகத் தீக்குளித்து மாண்டவர்கள் எல்லாம் எங்கள் அணி வகுப்பிலே இருந்தவர்கள். இன்றைக்கும் அவர்களுடைய வாரிசுகள் இங்கே இருக்கின்றார்கள். ஆகவே, திராவிட முன்னேற்றக் கழகம் என்பது ஓர் அரசியல் இயக்கம் என்றோ, இதை இந்தத் தேர்தலுக்குப் பிறகு அடுத்த தேர்தலில் தோற்கடித்து விடலாம் என்றோ யார் கங்கணம் கட்டினாலும் அவர்கள் தோற்றுத்தான் போவார்கள். எங்களை தேர்தலுக்குத் தேர்தல் சந்தித்து தோற்கடித்துவிடலாம் என்று யாரும் கருத முடியாது. ஏனென்றால், இது ஓர் எந்தத் தலை முறையும் சிந்தித்துப் பார்க்கின்ற ஓர் இயக்கம்.

இன்று காலையிலேயிருந்து நான் என்னுடைய மைத்துனர் தட்சிணாமூர்த்தி அவர்களுடைய இல்லத்தில் மறைந்துவிட்ட என்னுடைய தங்கையின் திருவுருவப் படத்தை திறந்து வைத்துவிட்டு வருகிற வழியிலே சந்தித்த இளம் பிள்ளைகள், சிறுமிகள், வாலிபர்கள், மாணவர்கள், வயதானவர்கள் இவர்களெல்லாம் தி.மு.கழகம் அவர்களுடைய செல்லப் பிள்ளை, அவர்களுடைய பிள்ளை என்ற அந்த உணர்வோடுதான் இருக்கிறார்கள்.

எனவே, அரசியலிலே பதவிகள் வரலாம், போகலாம். ஆனால், நாம் பெற்றிருக்கின்ற சுயமரியாதையை என்றைக்கும் யாரும் இழந்துவிடத் தயாராக இருக்கமாட்டார்கள். அதுதான் பெரியார் எங்களுக்குக் கற்றுக் கொடுத்த அந்த உணர்வு. அண்ணா எங்களுக்குப் போதித்த அந்த உணர்வு சுயமரியாதைதான். தம்பி துரைமுருகன் குறிப்பிட்டதைப் போல, மற்றும் பாலு குறிப்பிட்டதைப் போல, மற்ற தம்பிமார்களெல்லாம் இங்கே எடுத்துக்காட்டியதைப் போல இந்த இயக்கத்தினுடைய வளர்ச்சி எங்கெங்கே எவ்வெப்பொழுது, நம்முடைய இசை முரசு நாகூர் அனீபா அந்தக் காலத்திலே பாடுவாரே, நாகூர் அனீபா அந்தக் காலத்திலே பாடியதையும் கேட்டிருக்கிறோம். இந்தக் காலத்திலே அனீபா குரலில் பலர் பாடியதையும் கேட்டிருக்கிறோம். திராவிட நாட்டைப் பற்றி அவர்கள் பாடியது – புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடியது – "வாழ்க வாழ்கவே வளமார் திராவிட நாடு" என்ற அந்த வார்த்தைகள் நம்முடைய காதுகளில் இன்றைக்கும் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

ஆகவே, திராவிடம் – திராவிட இனம் – திராவிடக் கலாச்சாரம் இவைகளைக் காப்பாற்ற, அவைகளை எதிர்த்து வருகின்ற ஆரியமாயினும், ஆரியக் கலாச்சாரம் ஆயினும் அதற்கு இடம் தராமல் திராவிடக் கலாச்சாரத்தை வளர்ப்போம், அதை இந்தியா முழுமையும் வளர்ப்போம். இன்றைக்கு தமிழகத்திலே வளர்த்துக் கொண்டிருக்கின்ற இந்தக் கலாச்சாரம் – இந்த நாகரிகம் – இந்த வரலாறு எனக்குப் பிறகு – நான் மறைந்த பிறகு – நான் இருக்கும்போதே நடந்தாலும் நடக்காவிட்டாலும் என்னுடைய பிள்ளைகள், என்னுடைய பேரன் பேத்திகள் அவர்கள் காப்பாற்றுவார்கள்; அந்தக் கலாச்சாரத்தை, அவர்கள் காப்பாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அதற்கு எடுத்துக்காட்டாக – அந்தத் தைரியத்தை எனக்குத் தருகின்ற வகையிலே அமைந்துள்ள இந்த மாபெரும் மக்கள் சமுத்திரத்தை இங்கே உருவாக்கிக் காட்டிய நாகை மாவட்ட தோழர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

– இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

(நன்றி: 'முரசொலி' 11.10.2010)

உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள், மாண்புமிகு மத்திய மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் குலாம் நபி ஆசாத் அவர்கள் முன்னிலையில், ஒரு கோடி ஏழைக் குடும்பங்களுக்கான உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டத்திற்கான அடையாள அட்டையினை பயனாளிகளுக்கு வழங்கினார். மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், முக்கியப் பிரமுகர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடன் உள்ளனர். (சென்னை-23.7.2009)

கலைஞர் வீடு வழங்கும் திட்டம்





மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கடலூர் மாவட்டம் சிதம்பரம் தாலுக்கா, வல்லம்படுகை கிராமத்தில் "கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின்" கீழ் கட்டி முடிக்கப்பட்ட வீட்டை பார்வையிட்டு, பயனாளியிடம் விவரங்களைக் கேட்டறிந்தார். உடன் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர். பன்னீர்செல்வம் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு.எ.வ. வேலு, கடலூர் மாவட்ட ஆட்சியர் திரு. பி. சீதாராமன் ஆகியோர் உள்ளனர்.

(10.10.2010)

ISBN 978-93-80972-19-0
9 789380 972190